395

குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

50 காசு

உணவுச் சிறப்பு

காமதேனு வனஸ்பதியினுல் இன்னும் உயர்வடைகிறது

உப்பு பக்ஷணங்கள், இனிப்புப் பண்டங்கள் காமதேனு வனஸ்பதியில் தயார் செய்தால் நல்ல ருசியாய் இருக்கும். நெய் போன்றது; விலை குறைவானது.

கண்பார்வைக்குத் தேவை யானதும். சரும உபாதைகளைப் போக்க வல்லதுமான விடமின் 'A' கலக்கப் பெற்றது.

தயாரிப்பு:

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்டிரியல் கார்ப்பொரேஷன் லிட்.,

மேட்டூர் அணை, ஸேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:

சேஷசாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிட்.

சுவர்ண மாளிகை
P. A. ராஜு செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
P-1-49

ANNOUNCEMENT.



"TEXTOOL"

**TAKES PRIDE TO ANNOUNCE
THAT THEIR 4 CYLINDER
36 To 86 H. P.
AUTOMOTIVE DIESEL ENGINES**

will be out in the market Soon!!
Await Further News !!!

MANUFACTURERS:-

Textool Company Limited,

Post Box No. 221,

COIMBATORE.

**Phone: 409
1409**

**Gram:
'TEXTOLCO'**

YUMMIDI
RAMIAH CHETTY
GURUSWAMY CHETTY & CO.
JEWELLERS
23-25, CHINA BAZAAR ROAD
MADRAS

Branch :

I. I. C. BUILDING
Mount Road, : MADRAS-2

மலர் 16 இதழ் 7

விகாரி — ஐப்பசி

உள்ளுறை

			பக்கம்
1.	ஆண்டவன் அருள்	—காந்தியடிகள்	1
2.	பகவத் கீதை	,,	4
3.	சத்தியம்	,,	8
4.	பிரமசரியம்	,,	10
5.	எனது இந்தியா	,,	12
6.	கல்வியும் ஒழுக்கமும்	,,	15
7.	உபவாசமும் உணவுக்கட்டுப்பாடும்	,,	23
8.	ஒரு சம்பவம்	,,	26
9.	காந்தியடிகள் கருத்து	,,	28
10.	கொய்த மலர்கள்	,,	33
11.	எனது இயல்பு	,,	46
12.	மணமக்களுக்கு	,,	50
13.	கேள்வியும் பதிலும்	,,	53
14.	காந்தியடிகள் வாக்கு	,,	59
15.	குணமலை		69
16.	எது வாழ்வு ?	,,	75
17.	அன்பின் சக்தி		79

ஆண்டவன் அருள்

காந்தியடிகள்

என் வாழ்நாளில் நான் மேற்கொண்ட மிகப் பெரும் காரியங்களையும், அவ்வாறே மிகச் சிறு முயற்சிகளையும் பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது, அவை எல்லாவற்றையும் தூண்டி நடத்தியது ஆண்டவன் அருளே என்று கூறுதல் தவருகாது.

ஆண்டவன் வழிகளைக் குறைவின்றி விவரித்தல் இயலாத காரியம். கடவுளின் செயல்கள் விவரிக்கவும் அறியவும் ஒண்ணுதவை. ஆனல் மனிதன் துணிந்து அவற்றை விவரிக்கத் தலைப்பட்டானுயின் அதற்கு அவனுடைய அரை குறையான பேச்சே யல்லாமல் வேறு சாதனம் என்ன உண்டு ?

ஆண்டவனை நான் பார்த்ததில்லை; அவனை அறிந்ததும் இல்லை. ஆனல் உலகமெல்லாம் ஆண்டவனிடம் வைத்துள்ள நம்பிக்கையை என் நம்பிக்கையாகக் கொண்டேன். எனது நம்பிக்கை அழிக்க முடியாத ஒன்று. ஆதலின் அதை அனுபவத்துக்குச் சமானமாகவே கருதுகிறேன். ஆனல் நம்பிக்கையை அனுபவம் எனக் கூறுதல், உண்மைக்கு ஊறு செய்வதாகும் என்று சொல்லக் கூடும். ஆதலின் ஆண்டவனிடம் எனக்குள்ள நம்பிக்கையை விளக்கிக் கூற வார்த்தைகள் இல்லை என்று சொல்லுதல் அதைவிடப் பொருத்தமாய் இருக்கலாம்.

தெய்வ நம்பிக்கை யுள்ளவர்கள், தங்கள் இருதயத்தில் கோயில் கொண்டுள்ள இறைவனைப் பிறரிடம் காண்பார்கள். எனவே அவர்கள் எல்லோருடைய மத்தியிலும் விருப்பு வெறுப்பு இன்றி வாழக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இவ்வாறு வாழும் ஆற்றலைப் பெறுவதெப்படி ? நாம் தேடாமலே வரும் சந்தர்ப்பங்களை ஒதுக்கித் தள்ளுவதால் பெற முடியுமா ? தொண்டில் பற்றுடன் அச் சந்தர்ப்பங்களை வரவேற்று அவற்றினுல் மன அமைதி கெடாமல் காக்கப் பயில்வதாலேயே அத்திறமை பெறமுடியும்.

"நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது" என்னும் உண்மையைப் பல முறையும் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். ஆனுல் சத்தியத் தேட்டமே ஒருவனுடைய முடிவான லட்சியமாய் இருக்குமானுல், அவன் போடும் திட்டங்கள் எவ்வளவுதான் தவறிப் போனுலும், முடிவு தீமையாவதில்லை; சில சமயங்களில் எதிர்பார்த்ததைவிட அதிக நன்மையாய் முடிகிறது என்றும் கண்டுள்ளேன்.

பிரார்த்தனை

இறைவனிடம் மன்ருடுதலும், பூஜையும், பிரார்த்தனையும், பிறவும் வெறும் மூடக்கொள்கைகள் அல்ல. உணவு கொள்ளுதல் தண்ணீர் அருந்தல் உட்காருதல் நடத்தல் இவற்றைவிட அவை உண்மையான செயல்கள்; அவையே மெய்வினைகள்; மற்றவை எல்லாம் பொய் வினைகள் என்று கூறுவதும் மிகையாகாது.

பூஜை அல்லது பிரார்த்தனை வாக்குவன்மை காட்டுவதற்கு உரியதல்ல. அவை உதட்டிலிருந்து வருவன அல்ல. பிரார்த்தனை அந்தரங்க உள்ளத்திலிருந்து எழுவது. எனவே நாம் உள்ளத்தைத் தூய தாக்கி,

அன்பு ஒன்றைத் தவிர வேறு எதற்கும் அங்கு இட மில்லாமல் செய்தோமானல், வீணையின் எல்லாத் தந்தி களும் சுருதிகூட்டி வைக்கப்பெறும்போது இனிய சங்கீ தம் எழுந்து இன்பம் விளைவிப்பதுபோல உண்மைப் பிரார்த்தனை எழுந்து இறைவன் அருள் கூட்டுவிக்கும். பிரார்த்தனைக்குப் பேச்சு வேண்டாம். புலன்களினல் எத்தகைய முயற்சியும் அவசியமில்லை. உள்ளத்தைக் காமக் குரோதங்களிலிருந்து விடுவித்துத் தூயதாக்குவ தற்குப் பிரார்த்தனை உத்தமமான சாதனம். ஆனல் அத் துடன் அளவிறந்த தாழ்மைக் குணமும் கலந்திருத்தல் இன்றியமையாததாகும்.

தியானம்

உயிருள்ளவர்களின் உருவத்தை வைத்துத் தியா னம் செய்வது விரும்பத்தக்கதல்ல. மனத்தில் உருவகப் படுத்தித் தியானம் செய்யப் பெறுவது மாசற்றதாக இருக்க வேண்டும். ஆனல் உயிருள்ள எவரேனும் மாசற்றவர்களாக இருக்க முடியாது.

நமக்கு உருவம் எதற்கு ? கடவுள் உருவமற்றவர் ; குணமற்றவர். அவரையே ஏன் தியானிக்கக் கூடாது ?

அது முடியாவிட்டால், ஓங்காரத்தையோ, அல்லது நாமே கற்பித்துக் கொண்ட உருவத்தையோ வைத்து ஏன் தியானிக்கக் கூடாது? அன்னை கீதையை ஏன் தியானிக்கக்கூடாது ? அவள் காமதேனு என்னும் வற்ருமல் கொடுக்கும் பசுவுக்குச் சமம். இத்தகைய பசுவை மனத்திலிருத்தித் தியானிப்போமாக.

உயிருள்ளவர்களின் உருவத்தை வைத்துத் தியா னம் செய்வது கேடு பயக்கும். ஆகையால் அதனைத் தவிர்க்க வேண்டும்.

பகவத் கீதை

காந்தியடிகள்

பகவத்கீதை ஓர் விலையற்ற மாணிக்கம். இன்றைய தினம் ஞான நூல்களில் பகவத் கீதைக்கு ஒப்பானது எதுவும் இல்லை. என்னை இருள் சூழ்ந்த காலங்களில் அந்நூலே எனக்கு உற்ற துணையாய் இருந்து வந்திருக்கிறது.

என்னைப் பொறுத்த வரையில், பகவத் கீதை வாழ்க்கைக்கு வழி காட்டும் தவருத் துணையாகி விட்டது. தினசரி வாழ்க்கையில் ஐயங்கள் தோன்றும் போதெல்லாம் கீதையைப் பார்க்கலானேன். என்னுடைய கஷ்டங்களிலும், சோதனைகளிலும் இவ் ஒழுக்கமுறை அகராதியைத் பார்த்து மனம் தெளிந்தேன்; 'அபரிக்ரஹம்' (உடைமை இன்மை), 'சம பாவம்' என்பன போன்ற சொற்ருெடர்கள் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

சம பாவத்தை எப்படி வளர்ப்பது, எப்படிப் பாதுகாப்பது என்னும் கேள்விகள் எழுந்தன. நம்மை அவமதிப்பவர்களையும், லஞ்சம் வாங்கும் அதிகாரிகளையும் நேற்றைய தினம் சகாக்களாக இருந்து இன்று அநாவசியமான தடைகளைக் கிளத்துபவர்களையும், எப்போதும் நல்லவர்களாய் இருந்து வருபவர்களையும் சம பாவத்துடன் நோக்குவதெப்படி ? உடைமைகளை ஒன்றுமில்லாமல் செய்து கொள்ளுதல் எவ்வாறு ? உடம்பே ஓர் உடைமை யல்லவா ? மனைவிகளும் குழந்தைகளும்

உடைமைகள் அல்லரா? என்னிடம் அலமாரிகள் நிறைய இருந்த புத்தகங்கள் அனைத்தையும் கொளுத்தி விட வேண்டுமா? 'எனது' எனக்கூடிய எல்லாவற்றை யும் உண்மையிலேயே துறந்துவிட்டு ஆண்டவன் பணி யில் ஈடுபடுவதா?

இந்த ஐயங்களுக்குத் தெளிவான விடை உடனே கிடைத்தது. உடைமைகள் எல்லாவற்றையும் அடி யோடு தியாகம் செய்தாலன்றி, இறைவன் தொண்டில் ஈடுபட முடியாது என்பதே அந்த விடையாகும். நான் ஆங்கிலச் சட்டம் படித்திருந்தது இப்போது பயன் பட்டது. சமநீதியைப் பற்றி ஸ்நெல் என்பார் எழுதி யுள்ள விரிவுரை என நினைவுக்கு வந்தது. கீதையின் உபதேசத்தைப் படித்த பின்னர், தர்மகர்த்தர் (டிரஸ்டி) என்னும் பதத்தின் பொருளை நன்கு தெரிந்து கொண் டேன். நீதி சாஸ்திரத்தினிடம் எனக்கு மதிப்பு அதிக மாயிற்று; கீதையின் 'அபரிக்ரஹ' உபதேசத்தின் கருத்தை உணர்ந்தேன். மோட்ச விருப்பமுள்ளவர்கள், தங்கள் உடைமைகளுக்குத் தாங்கள் தர்மகர்த்தர்கள் என்றே கருதி நடந்து கொள்ள வேண்டும் என்பதே அதன் கருத்து என அறிந்தேன்.

தர்மகர்த்தன் ஒருவனுடைய ஆதிக்கத்தில் எவ்வளவு சொத்துக்கள் இருந்தாலும், அவன் அவற்றில் ஒரு தூசையும் தன் உடைமையாகக் கருதாதது போல, மோட்ச இச்சை உள்ளவன் இருத்தல் வேண்டும். அப ரிக்ரஹம், சமபாவம் என்னும் இரு குணங்களையும் பெற வேண்டுமானால், மனோ நிலை மாறுதல் அடையவேண்டி யது அவசியம் என்று தெளிவாய் உணர்ந்தேன்.

பகவத் கீதையைப் பாமர மக்கள் புரிந்து கொள்ள முடியாதென்று சில சமயம் சொல்லுகிறார்கள். இப்படிச்

சொல்லுவது ஆதாரமில்லாத பேச்சு என்று நான் துணிந்து கூறுவேன். காலஞ் சென்ற லோகமான்ய திலகர், கடல் போல் பரந்த கல்வியுடையவர்; விரிந்த ஆராய்ச்சியும் உடையவர். இவற்றின் துணை கொண்டு அழியாத பேறுள்ள ஒரு வியாக்கியானத்தை அவர் எழுதியிருக்கிருர். அவருக்குக் கீதையானது, அறிவைச் செலுத்தி ஆராய்வதற்கேற்ற பேருண்மைகள் அடங்கிய நிலையமாக இருந்தது.

ஆனல், இதைக்கண்டு சாமானிய அறிவுடையோர் கீதையைப் படிப்பதற்கு அஞ்சவேண்டியதில்லை. கீதையிலுள்ள பதினெட்டு அத்தியாயங்களையும் பயில்வது உங்களுக்குக் கஷ்டமாகத் தோன்றினல், முதல் மூன்று அத்தியாயங்களை மட்டும் கருத்தோடு படித்தாலே போதும். எஞ்சிய பதினைந்து அத்தியாயங்களில் விரிவாகவும் பல வகையான நெறிகள் பற்றியும் விளக்கிக் கூறியுள்ள விஷயங்கள், இந்த மூன்று அத்தியாயங்களில் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளன. இந்த மூன்று அத்தியாயங்களையும் சுருக்கி இவற்றிலிருந்து சில சுலோகங்களை மட்டுமே எடுத்துக் கொண்டாலும் போதுமானது. இந்த உண்மையோடுகூட இன்னெரு விஷயத்தையும் நாம் கீதையில் தெரிந்து கொள்கிருேம். குறிப்பாக மூன்று இடங்களிலே கீதையானது ஒவ்வொரு படியாக மேலே சென்று, குழப்பத்தைத் தருகின்ற வெறும் தத்துவ நெறிகள் அனைத்தையும் கடந்து பரம்பொருளாகிய கடவுள் ஒருவரிடமே அடைக்கலம் புகும்படி நமக்கு உணர்த்துகிறது. இதைப் படித்த பின்னரும் கீதையின் உபதேசம் சாமானிய மக்கள் அறிந்து கொள்ள முடியாத வண்ணம் நுட்பமாகவும், சிக்கலாகவும் இருக்கிறது என்று சொல்லுவது எவ்வளவு ஆதாரமற்ற கூற்று என்பதை நாம் காணலாம்.

கீதையே அகிலத்துக்கும் அன்னை. எவரையும் அவள் புறக்கணிப்பதில்லை. அவளது வீட்டு வாயில் திறந்தே கிடக்கும்; விரும்புவோர் யாரும் தாராளமாக உள்ளே போகலாம். கீதையில் உண்மையான பக்தியுடைய எவருக்கும் ஏமாற்றம் என்பதே இன்னதென்று தெரியாது. அறிவின் எல்லையைக் கடந்துள்ள நிரந்தரமான ஆனந்தத்தையும் சாந்தியையும் அவர்கள் எப்போதும் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சாந்தியும் ஆனந்தமும் சந்தேகப் பேர்வழிக்கும், அறிவையோ படிப்பையோ பற்றிக் கர்வம் கொண்டிருப்பவனுக்கும் கிட்டாது. நம்பிக்கை நிறைந்து சித்தம் ஒன்றிப் பணிவுடைய உள்ளத்தோடு வழிபடுகிறவர்களுக்கே அந்தப் பாக்கியம் கொடுத்து வைத்திருக்கிறது. இந்த உணர்ச்சியோடு கீதையை வழிபட்டு ஏமாற்றம் அடைந்தவர் யாருமே இல்லை.

ஏசு நாதர்

இத்தாலியில் உள்ள, வாட்டிகன் நகரில், நான் கண்ட ஏசு நாதரின் உருவம் எப்போதும் என் கண் முன்னே தோன்றுகிறது. நம் நாட்டில் ஏழை கிராம வாசிகள் அணிவது போன்ற ஒரு சிறு துணிதான் அவ்வுருவத்தின் மீது போர்த்தப் பெற்றிருந்தது. ஏசு நாதரின் பார்வையில்தான் என்ன அபூர்வமான பரிவு!

—காந்தியடிகள்

சத்தியம்

காந்தியடிகள்

சத்தியத்தை யன்றி வேறு கடவுள் இல்லை.

உலக மனைத்திலும் ஊடுருவி நிற்கும் சத்தியப் பொருளை நேருக்கு நேர் காண விழையும் ஒருவன் படைப்பில் மிகத் தாழ்ந்த படியிலுள்ள உயிரையும், தன்னைப் போலவே நேசிக்கும் ஆற்றல் பெறவேண்டும்.

நாம் தினந்தோறும் பார்க்கும் சூரியனுடைய பிரகாசத்தை விடக் கோடி மடங்கு ஜோதியுடையது சத்தியம்.

சன்மார்க்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை. சத்தியமே சன்மார்க்கத்தின் சாரம்.

சத்திய உபாசகன், பாரமார்த்திகத் துறையில் பயில வேண்டிய கட்டுப்பாடுகளுள் மௌனமும் ஒன்று.

சத்தியம் ஓர் அம்சத்தில் பூவிதழிலும் மென்மையானது. ஆயினும் மற்றோர் அம்சத்தில் கற்பாறையிலும் கடினமானது.

சத்தியம் என்பது பெரிய விருட்சம். அதற்கு நீர் ஊற்றி வளர்க்க, வளர்க்க அதிக பழங்களைத் தருகிறது.

சத்தியம் என்னும் சுரங்கத்தில் எவ்வளவு ஆழமாகத் தோண்டி சோதனை போடுகிறோமோ, அவ்வளவுக்கு அதில் புதைந்து கிடக்கும் அரிய இரத்தினங்களைக் கண்டுபிடிப்போம். தொண்டு செய்வதற்குப் புதிய புதிய முறைகளே அந்த இரத்தினங்களாகும்.

சம்பிரதாயம் என்பதற்காகச் சத்திய உபாசகன் எதுவும் செயலாகாது. எப்போதும் அவன் திருத்தப் பெறுவதற்குத் தயாராய் இருக்க வேண்டும். தான் செல்லும் வழி தவருனது என்று அவன் கண்டால், உடனே என்ன நேர்வதாயினும் அதனை ஒப்புக்கொண்டு அதற்குப் பரிகாரம் தேட வேண்டும்.

சத்தியம் என்பது என்ன? இது ஒரு தர்மசங்கட மான பிரச்னை. ஆனல் என் சம்பந்தப்பட்ட மட்டில் இதை ஒரு விதமாகத் தீர்த்துக் கொண்டு விட்டேன். உள்ளத்தின் குரல் சொல்லுவதே எனக்குச் சத்தியம். அப்படியானல் வெவ்வேறு மனிதர்கள் ஒன்றுக்கொன்று மாருன வெவ்வேறு சத்தியங்களை ஏன் சிந்தித்திருக் கிருர்கள் என்று நீங்கள் கேட்கலாம். எண்ணற்ற சாத னங்களைக் கொண்டு மனிதனின் மனம் சிந்திக்கிறது. எல்லோருடைய மனமும் ஒரே விதமான பரிணமத்தை அடைந்திருக்கவில்லை. ஆனல் ஒருவனுக்குச் சத்திய மாக இருப்பது மற்ருெருவனுக்கு அசத்தியமாகத் தோன் றலாம். ஆகவே சத்திய சோதனை செய்வதற்குச் சில நிபந்தனைகள் அவசியமாகின்றன.

எந்தவிதமான பயிற்சியும் இல்லாதவர் எல்லாம் இந்தக் காலத்தில் மனச்சாட்சி உரிமை கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள். அதனல்தான் உலகம் திகைக் கும்படி அசத்தியங்கள் மலிந்துவிட்டன. நிறைந்த பணி வில்லாத எவனுக்கும் சத்தியம் புலனுகாது. சத்தியம் என்ற கடலில் நீங்கள் நீந்தவேண்டுமானல், உங்களை நீங்கள் ஒரு பூஜ்யமாகச் செய்து கொள்ளவேண்டும்.

எனது இந்தியா

காந்தியடிகள்

இந்தியா கர்ம பூமியாகவே இருக்கும், போக பூமியாக இருக்க முடியாது. எந்த இந்தியாவில் பஞ்சைப் பாமரர்களின் சொல் அம்பலம் ஏறுமோ, எந்த இந்தியாவை அவர்கள் தமது என்று உணர்வார்களோ, அந்த இந்தியாவுக்காகவே நான் உழைப்பேன். உயர்வு தாழ்வற்ற ஜன சமுதாயத்தைக் கொள்ளும் இந்தியாவுக்காக உழைப்பேன்; எல்லா ஜாதியினரும் ஒற்றுமைப்பட்டு இங்கிதமாயிருக்கும் இந்தியாவுக்காகவே உழைப்பேன். அந்த இந்தியாவில் தீண்டாமையின் சாபத் தீட்டுக்கும் போதைப் பொருள்களுக்கும் இடம் கிடையாது. நாம் உலகத்து மக்களைச் சுரண்டாமலும், சுரண்டவிடாமலும், பார்த்துக்கொள்ள வேண்டுமானால், நம்மிடம் சின்னஞ் சிறு படையே இருக்க வேண்டும்; என்னைப் பொறுத்த வரையில் நம்நாடு வெளிநாடு என்ற பாகுபாட்டை வெறுக்கிறேன். இதுவே இந்தியாவைப் பற்றிய என் கனவு. வேறு எதுவும் என்னைத் திருப்திப்படுத்த முடியாது.

விடுதலையும் வலுவும் இந்தியா பெற வேண்டும் என எண்ணுகிறேன்; ஏனெனில் அப்போதுதான் இந்தியா உலகத்தின் முன்னேற்றத்துக்காக மனமாரத் தனது புனிதமான தியாக சேவையைச் செய்ய முடியும். இந்தியாவின் விடுதலை சமாதானத்தின் மீதும், யுத்தகத்தின் மீதும் உலகம் கொண்டுள்ள கண்ணோட்டத்தைப் புரட்சி

அபாய எல்லையைத் தாண்டிவிட்டேன் என்று சொல்ல லாம். ஆயினும் சிந்தை இன்னும் முற்றிலும் என் வசப் பட்டுவிடவில்லை. எவ்வளவு விழிப்புடன் இருந்தாலும் தீய எண்ணங்கள் எங்கிருந்து வந்து எப்படித்தான் முளைக் கின்றன என்பது எனக்கு இன்னும் விளங்காத ஒரு பிரச்னையாக இருந்து வருகிறது. தீய எண்ணங்கள் உள்ளே நுழையா வண்ணம் மனக்கதவைப் பூட்டும்சாவி மனிதனிடம் இருக்கிறதென்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனும் அதைத் தானே தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். மகான்களும், முனிவர்களும் தங்கள் அனுபவங்களை நமக்காகச்சொல்லி விட்டுச் சென்றுள்ளார்கள். ஆயினும், எல்லோருக்கும் பொருந்தக் கூடியதும், தவறாது பயனளிப்பதுமான மருந்து எதையும் அவர்கள் குறிப்பிடவில்லை, பரிபூர ணத்துவம்—அதாவது தவறே செய்யாதிருக்கும் சக்தி ஆண்டவன் அருளினாலேயே கைகூடும்; ஆதலின் பக் தர்களும், ஞானிகளும், தங்களுடைய தவ வலிமையும் தூய்மையும் ஊட்டப்பெற்ற ஸ்ரீ ராம நாமம் முதலிய மந் திரங்களை நமக்கு அளித்துள்ளார்கள். அவன் அருள் நாடி, அவனிடம் பரிபூரணமாய் அடைக்கலம் புகுந்தா லன்றி, மனத்தை முழுதும் கட்டுப்படுத்தல் இயலாத காரியம். சிறந்த சமய நூல் ஒவ்வொன்றும் இதையே போதிக்கிறது.

அறிகுறி

அவலட்சணமான கையெழுத்து, கல்விப் பயிற்சியின் குறைபாட்டுக்கு ஓர் அறிகுறி.

—காந்தியடிகள்

எனது இந்தியா

காந்தியடிகள்

இந்தியா கர்ம பூமியாகவே இருக்கும், போக பூமியாக இருக்க முடியாது. எந்த இந்தியாவில் பஞ்சைப் பாமரர்களின் சொல் அம்பலம் ஏறுமோ, எந்த இந்தியாவை அவர்கள் தமது என்று உணர்வார்களோ, அந்த இந்தியாவுக்காகவே நான் உழைப்பேன். உயர்வு தாழ்வற்ற ஜன சமுதாயத்தைக் கொள்ளும் இந்தியாவுக்காக உழைப்பேன்; எல்லா ஜாதியினரும் ஒற்றுமைப்பட்டு இங்கிதமாயிருக்கும் இந்தியாவுக்காகவே உழைப்பேன். அந்த இந்தியாவில் தீண்டாமையின் சாபத் தீட்டுக்கும் போதைப் பொருள்களுக்கும் இடம் கிடையாது. நாம் உலகத்து மக்களைச் சுரண்டாமலும், சுரண்டவிடாமலும், பார்த்துக்கொள்ள வேண்டுமானல், நம்மிடம் சின்னஞ் சிறு படையே இருக்க வேண்டும்; என்னைப் பொறுத்த வரையில் நம்நாடு வெளிநாடு என்ற பாகுபாட்டை வெறுக்கிறேன். இதுவே இந்தியாவைப் பற்றிய என் கனவு. வேறு எதுவும் என்னைத் திருப்திப்படுத்த முடியாது.

விடுதலையும் வலுவும் இந்தியா பெற வேண்டும் என எண்ணுகிறேன்; ஏனெனில் அப்போதுதான் இந்தியா உலகத்தின் முன்னேற்றத்துக்காக, மனமாரத் தனது புனிதமான தியாக சேவையைச் செய்ய முடியும். இந்தியாவின் விடுதலை சமாதானத்தின் மீதும், யுத்தகத்தின் மீதும் உலகம் கொண்டுள்ள கண்ணேட்டத்தைப் புரட்சி

கரமாக மாற்றியமைக்க வேண்டும். இந்தியாவின் சக்தி யற்ற நிலை மனித குலத்தையே பாதிக்கிறது. ஐரோப் பாவின் காலடியிலே சரணுகதி யடையும் இந்தியா மனித குலத்துக்கு நம்பிக்கை ஊட்ட முடியாது. இந்தியா மட் டும் முழு மூச்சோடு ஏய்ப்பு இளைப்பின்றி இந்திய நாக ரிகத்தை அநீதமான முறையில் அழிக்கவரும் சூழ்ச்சி களை எதிர்த்து தியாகவேள்வித் தீயில் பாய்ந்தால் அது இதுவரையிலும் நிலைத்து வந்த நாகரிகத்தை இனியும் நிலை நிறுத்தி, உலகத்தின் முன்னேற்றத்துக்கும் சமாதா னத்துக்கும் சிறந்த சேவை செய்ததாகும்.

எனது நாடு விடுதலை யடையவேண்டும்; ஏனெனில் எனது நாட்டிலிருந்து உலகம் எதேனும் கற்றுக்கொள் ளக் கூடும். எனது நாட்டின் செல்வங்கள் உலக நல னுக்காகப் பயன் படக்கூடும். குடும்ப நலனுக்காகத் தனி மனிதன் சாக வேண்டும். கிராம நலனுக்காகக் குடும்பம் சாகவேண்டும். ஜில்லா நலனுக்காகக் கிராமம் சாகும்; மாகாண நலனுக்காக ஜில்லா சாகும். நாட்டின் நலனுக் காக மாகாணம் சாகும் என்று சுதந்திர லட்சியம் கற்றுக் கொடுப்பது போல் உலகின் நலனுக்காக, அவசியம் நேர்ந்தால் ஒரு நாடே சாகவும் தயாராயிருக்க வேண்டும்.

இந்தியா உயர வேண்டும் என்ருல் உலகம் அதன் மூலம் பயன்பெற வேண்டும் என்று தான் அதன் அர்த் தம். மற்ற தேசங்களின் அழிவிலே இந்தியா மேலோங் கக் கூடாது. என்னுடைய ஆசை சுதந்திரத்துக்கும் மேலானது. இந்திய விடுதலையின் மூலம் மேற்கத்திய சுரண்டல் முறையின் இருப்புப் பாதங்களுக்கிடையே நசுங்கும் பாமர மக்களையும் விடுபெறச் செய்யவேண்டும் என்பதே என் நோக்கம்.

இந்தியா பிற நாடுகளைச் சுரண்டி வாழ்ந்தால் (யந்திரமயமாகும் போது அப்படிச் சொல்லக்கூடும்)—அது பிறநாடுகளுக்கு ஒரு சிம்ம சொப்பனம்.

தேசீய அரசாங்கம் எந்த மாதிரியான கொள்கையைக் கடைப்பிடிக்கும் என்பதை என்னால் கூற முடியாது. நான் விரும்பும் அளவுக்கு நான் அதைக் காண முடியாது. அப்படிச் செய்தால் கூடுமானவரையிலும் அஹிம்சா பூர்வமான பாதையிலே செல்லும்படியே ஆலோசனை கூறுவேன். அதுவே உலக சமாதானத்துக்கும், புதிய சமுதாய அமைப்பு முறைக்கும் இந்தியா செய்யக்கூடிய சிறந்த சேவை யாகும். இந்தியாவில் எத்தனை வித மக்கள் பிரிவினை இருந்தாலும், சுதந்திர இந்தியாவில் அவர்கள் எல்லோரும் ஒன்றுபட்ட குரல் படைத்தவர்களாய் இருப்பார்கள் என்றே நான் எதிர்பார்க்கிறேன்.

நாட்குறிப்பு

நாட் குறிப்பு விவரமாக இருக்க வேண்டும். மிக அந்தரங்கமான விஷயங்களையும் அதில் எழுத வேண்டும். மற்றவர்களிட மிருந்து மறைக்கும் எதுவும் நம்மிடம் இருக்கக்கூடாது. ஆதலால், மற்றவர்கள் யாராவது நமது நாட் குறிப்பைப் படித்துவிடுவார்களே என்ற பயம் நமக்கு ஏற்படாது. என்ற போதிலும் மற்றவர்களுடைய குறைகளையும், பிறர் நம்மிடம் அந்தரங்கமாகக் கூறியவைகளையும் நாட் குறிப்பில் எழுதக்கூடாது.

—காந்தியடிகள்

கல்வியும் ஒழுக்கமும்

காந்தியடிகள்

கல்விக்குச் சரியான அடிப்படை ஒழுக்கப் பயிற்சியே.

உபாத்தியாயர்கள் செய்தாத எந்த வேலைகளையும் பிள்ளைகளைச் செய்யச் சொல்லக் கூடாது.

பிள்ளைகளுக்கு உண்மையான பாடப்புத்தகம் உபாத்தியாயரே யாகும்.

*　　　*　　　*

குழந்தைகள் பெற்றோர்களின் உடற்கூறுகளை மட்டுமின்றி, அவர்களுடைய குண அம்சங்களையும் பிதிரார்ஜிதமாகப் பெறுகின்றனர். சுற்றிலுமுள்ள வாழ்வு நிலை, குழந்தைகளின் குணங்களைப் பெரிதும் மாற்றியமைக்கின்றன என்பது உண்மையே. ஆனால் வாழ்க்கை தொடங்கும்போது, குழந்தையின் மூலதனம் பெற்றோர்களிடமிருந்து பெற்றதே யாகும்.

குழந்தைகளை மிகச் சிறுவயதிலிருந்து ஆங்கிலத்திலேயே எண்ணவும், பேசவும் பயில்விக்கும் இந்தியர்கள் தங்கள் குழந்தைகளுக்கும், தேசத்துக்கும் பெரிய துரோகம் செய்கிறார்கள் என்பது என் கருத்து.

ஒழுங்குடன் நடைபெறும் ஒரு குடும்பத்தில், குழந்தைகள் இயற்கையாகப் பெறக்கூடிய கல்விப் பயிற்சி, மாணுக்கர் விடுதிகளில் பெறல் அரிது.

என் புதல்வர்களிடம் ஒழுக்கக் குறைபாடுகள் ஏதேனும் காணப்படுமாயின், அவற்றிற்கு என்னுடைய அசிரத்தை காரணமல்ல என்று நிச்சயமாகக் கூறுவேன். என்னிடமும், என் மனைவியிடமும் உள்ள குறைகளே அவர்களிடம் பிரதிபலித்திருக்கின்றன.

தற்போதைய இந்து சமூகம் ஒன்றிலேதான் கல்யாணமும், கல்விப் பயிற்சியும் ஒரே சமயத்தில் நடைபெறுகின்றன,

மனப் பயிற்சியைப் போலவே, உடற்பயிற்சியும் பள்ளிக்கூடங்களில் இடம் பெற வேண்டும்.

இந்தியாவில் உயர்தரக் கல்வி முறையில் தாய் மொழியோடு கூட ஹிந்தி, சம்ஸ்கிருதம், பாரஸீகம், அரபு, ஆங்கிலம் இவ்வளவு மொழிகளுக்கும் இடமிருக்க வேண்டும்.

* * *

எனது அறியாமையை எனது மாணுக்கர்களிடமிருந்து நான் மறைக்க முயன்றதே யில்லை. எல்லா விஷயங்களிலும் என்னை உண்மை நிலையிலேயே அவர்களுக்குக் காண்பித்தேன்.

குழந்தைகள் எப்போதும், கண்களினுல் கற்றுக் கொள்வதைவிடக், காதுகளின் வழியாய் அதிகம் கற்றுக் கொள்கின்றனர்; எளிதிலும் கற்றுக் கொள்கின்றனர்.

பிள்ளைகளின் தேகப் பயிற்சி, அறிவுப் பயிற்சி, இவற்றைவிட, அவர்களுடைய ஆன்மப் பயிற்சி அதிகக் கஷ்டமாய் இருந்தது.

ஆன்மப் பயிற்சியாவது, ஒருவனைச் சன்மார்க்கத் துறையில் நிறுத்தி அவனுக்குப் பிரமஞானம், ஆத்மானுபூதி என்னும் இவற்றைத் தேடுதற்குரிய சக்தி யளித்

தலே யாம். இளேஞர்களின் கல்விப் பயிற்சியில் இது ஓர் முக்கிய அம்சமாக இருத்தல் வேண்டும். ஆன்மப் பயிற்சிகள் எல்லாம் பயனற்றவை யாவதோடு, தீமை பயத்தலும் கூடும்.

வாழ்க்கையின் நான்காவது நிலேயான சந்நியாச ஆசிரமத்திலேதான் ஆன்ம ஞானப் பேறு பெறல் சாத்தியம் என்பதாக ஒரு குருட்டுக் கொள்கை இருந்து வருகிறது. ஆனல் ஆன்ம ஞான அனுபவத்துக்குரிய முயற்சியை வாழ்க்கையின் கடைசிப் பகுதிக்கென்று தள்ளி வைத்திருப்போர், ஒருகாலும் ஆன்ம ஞானம் அடைவதில்லே. அவர்கள், இரண்டாவது குழந்தைப் பருவத்துக்குச் சமமான முதுமைப் பருவத்தையே அடைந்து, இரக்கத் தக்கவர்களாகிப் பூமிக்குப் பாரமாய் வாழ்கிருர்கள்.

குழந்தைகளுக்கு ஆன்ம ஞானப் பயிற்சி அளித்தல் எவ்வாறு? அவர்களேத் தோத்திரப்பாக்கள் நெட்டுருப் பண்ணிப் பாடும்படி செய்தேன். சன்மார்க்கம் போதிக்கும் நீதி நூல்களிலிருந்து அவ்வப்போது சில பகுதிகளேப் படித்துக் காட்டினேன். ஆனல், இவற்ருல் எல்லாம் நான் திருப்தியடைந்துவிடவில்லே. அவர்களுடன் நெருங்கிப் பழக, புத்தகங்களின் மூலமாய் ஆன்மப் பயிற்சியளிக்க முடியவே முடியாது என்று உணர்ந்தேன். தேகாப்பியாசங்களின் மூலமாகவே தேகப் பயிற்சியும், அறிவு அப்பியாசங்கள் மூலமாகவே அறிவுப் பயிற்சியும் அளிக்கப்படக் கூடும் என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வாறே ஆன்மப் பயிற்சியும் ஆன்ம சாதன அப்பியாசங்களின் மூலமாகவே சாத்தியமாகும் என்று கண்டேன்.

ஆன்ம சாதன அப்பியாசமோ, ஆசிரியரின் வாழ்க்கையையும், ஒழுக்கத்தையும் முற்றும் பொறுத்த ஒன்ரு

கும். ஆசிரியர் பிள்ளைகளின் மத்தியில் இருக்கும்போதும் சரி, மற்ற வேளைகளிலும் சரி, தம்முடைய குணம் செயல் இவை குறித்து மிக எச்சரிக்கையாக இருத்தல்வேண்டும். ஆசிரியர் பிள்ளைகளிடமிருந்து பல மைல் தூரத்துக்கு அப்பால் இருந்தாலும், தம்முடைய வாழ்வு முறையின் மூலம் அப்பிள்ளைகளின் ஆன்மப் பயிற்சிக்குத் துணை செய்யவோ, ஊறு செய்யவோ இயலும்.

நான் பொய்யனாய் இருந்தால் என்னிடம் பயிலும் பிள்ளைகளுக்கு உண்மை பேசக் கற்றுக்கொடுத்தல் வீண் முயற்சியே யாகும். கோழை ஆசிரியர் ஒருவர் தம் பையன்களை வீரர்கள் ஆக்குதல் ஒருக்காலும் இயலாத காரியம். அவ்வாறே, புலனடக்கத்தைக் கைக்கொள்ளாத ஆசிரியர், தமது பிள்ளைகளுக்குப் புலனடக்கம் போதிக்கவும் முடியாது. எனவே, என்னுடன் வசித்த பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் நான் நித்திய உதாரண பாடமாய் இருக்கவேண்டும் என்று உணர்ந்தேன். இவ்வாறு மாணுக்கர்கள் எனது ஆசிரியர்கள் ஆனார்கள். அவர்களுக்காகவேனும் நான் நல்லவனாய் இருக்கவேண்டும் என்றும், நேர்மை வாழ்வு நடந்த வேண்டும் என்றும் கற்றுக்கொண்டேன்.

டால்ஸ்டாய் பண்ணையில் நான் அதிகக் கட்டுப்பாட்டையும், புலனடக்கத்தையும் மேற்கொண்டதற்குப் பெரும்பாலும் அக் குழந்தைகளே காரணம் என்று சொல்லலாம்.

மாணவர்களில் ஒருவன் நிரம்பத் துஷ்டன்; அடங்காப்பிடாரி; பொய்சொல்லுபவனாகவும், சண்டை போடுபவனாகவும் இருந்தான். ஒரு நாள் அவனுடைய துஷ்டத்தனம் அளவு மீறி விடவே, என்னால் பொறுக்க முடியாமல் போய்விட்டது. நான் அதுவரை பிள்ளைகளைத் தண்டித்

ததே கிடையாது. ஆனால் இப்போது உண்மையிலேயே ரொம்பக் கோபம் வந்துவிட்டது. அவனுக்குப் புத்தி சொல்ல முயன்றேன். ஆனால் அவன் சிறிதும் அசைய வில்லை. என்னையே எதிர்த்துத் தலை மீதேறப் பார்த்தான்.

கடைசியில், அருகில் கிடந்த 'ரூல்' கழியை எடுத்துக் கொண்டு அவனுடைய கையில் ஓர் அடி அடித்தேன். அப்படி அடித்தபோது, என் உடம்பு நடுநடுங்கிற்று. அதை அவன் பார்த்திருக்க வேண்டும். மாணவர்கள் எல்லோருக்குமே இது ஒரு புதிய அநுபவம். அடிவாங்கிய பையன் சத்தம் போட்டு அழுதான். மன்னிக்கும்படி கெஞ்சினான்; அடி வலித்ததற்காக அவன் அழவில்லை. பதினேழு வயதான, தேக வலிமையுள்ள வாலிபன் ஆதலால் அவனுக்கு மனமிருந்தால் என்னைத் திருப்பி அடித்திருக்கவும் கூடும். ஆனால், நான் எவ்வளவு மனத்துன்பம் அடைந்ததன்மேல் அவனை அடிக்கத் தலைப்பட்டிருக்க வேண்டும் என்பதை அவன் உணர்ந்தான். இந் நிகழ்ச்சிக்குப் பின்னர், அவன் எனக்குக் கீழ்ப்படியாது இருந்ததே யில்லை. ஆனால் அவ்வாறு பலாத்காரத்தைக் கைக் கொண்டது குறித்து இன்னமும் நான் வருந்துகிறேன். அன்றைய தினம் அப் பையன் முன்பு நான் என்னுடைய ஆன்ம சக்தியைக் காட்டவில்லை. என்னுடைய விலங்குக் குணத்தையே காட்டினேன் என்றும் எண்ணுகிறேன்.

உடல் தண்டனையே உதவாது என்பது என்னுடைய உறுதியான கருத்து.

* * *

பல வகையாக வளர்க்கப் பெற்ற சிறுவர், சிறுமியர் ஓர் இடத்தில் சேர்க்கப் பெற்று, கல்வி கற்பிக்கப் பெறும்

பொழுது, அது பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெரியதொரு சோதனையாகிறது. அவர்கள் எப்போதும் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

மாணவர்களையும், மாணவிகளையும் சரியான வழியில் கல்வி பயிற்றி வளர்த்தல் எவ்வளவு கஷ்டம் என்பது நாளுக்கு நாள் எனக்கு நன்கு தெளிவாகி வந்தது. உண்மையாகவே, அவர்களுடைய ஆசிரியனாகவும், பாது காவலனாகவும் நான் ஆக வேண்டுமானால், அவர்களுடைய இருதயங்களைக் கவர்ந்துவிட வேண்டும்; அவர்களுடைய சுக துக்கங்களைப் பகிர்ந்து அநுபவிக்க வேண்டும்; அவர்களுடைய இளமை காரணமாகப் பொங்கி எழும் விருப்பங்களை யெல்லாம் நேரிய வழியில் செலுத்த வேண்டும் என்பதை உணரலானேன்.

இச் சமயத்தில் நான் ஒரு கடுஞ் சோதனைக்கு ஆளாக வேண்டியதாயிற்று. ஆசிரம வாசிகள் இருவர் ஒழுக்கம் தவறி வீழ்ந்தனர் என்னும் செய்தி கேட்டேன். அதைக் கேட்டதும் இடி விழுந்ததே போல் திகைத்துப் போனேன்.

என்னுடைய கடமை இன்னதென்று எனக்குத் தெளிவாயிற்று. ஒரு பையனோ, பெண்ணோ நெறிதவறி நடந்தால், அதற்கு ஆசிரியன் அல்லது பாதுகாவலன் ஓரளவேனும் பொறுப்புள்ளவன் என்று உணர்ந்தேன். ஆதலின் இவ்விஷயத்தில் என்னுடைய பொறுப்பு என்ன வென்பது எனக்கு தெற்றென விளங்கிற்று. அவர்களைப் பற்றி என் மனைவி முன்னமே எச்சரித்திருந் தாள். ஆனால் பிறரை எளிதில் நம்பும் இயல்புடைய நான், அவளுடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்த வில்லை.

குற்றம் செய்தவர்களைத் தங்கள் குற்றத்தை உணரச் செய்வதற்கும், அதனால் எனக்கு நேர்ந்த மனத் துன்பத்தை அறியச் செய்வதற்கும், அக் குற்றத்துக்காக நான் பிராயச் சித்தம் செய்து கொள்ளல் அவசியம் என்று கண்டேன். ஆதலின் ஒரு வாரத்துக்கு உபவாச விரதமும், அதற்குப் பின்னர் நாலரை மாதத்துக்குத் தினம் ஒரு வேளையே சாப்பிடுவதென்றும் விரதமும் கொள்ளத் தீர்மானித்தேன்.

மேற்கண்ட தீர்மானம், என் மனத்திலிருந்த ஒரு பெரும் சுமையை நீக்கிற்று; மன ஆறுதல் பெற்றேன். குற்றம் செய்தவர்களிடம் உண்டான கோபமும் தணிந்தது. கோபம் இருந்த இடத்தில் தூய இரக்கம் உண்டாயிற்று.

என்னுடைய பிராயச்சித்தம் எல்லோருக்கும் துன்பமளித்ததாயினும், அதனால் நிலைமை தெளிவடைந்தது. பாவம் செய்தல் எவ்வளவு பயங்கரமானது என்று ஒவ்வொருவரும் உணர்ந்தார்கள். என்னைச் சிறுவர் சிறுமிகளுடன் பிணைத்த அன்புத் தளையானது இன்னும் பலம் பெற்று உண்மைத் தளையே யாயிற்று.

இதிலிருந்து, மாணுக்களிடையே ஒழுக்கத் தவறு நேரிடும் போதெல்லாம், பட்டினி கிடத்தல் ஆசிரியர் கடமை என நிரூபிப்பது என்னுடைய நோக்கமன்று. ஆனால், சில சமயங்களில் இந்தக் கடும் பரிகார முறை அவசியம் என்பது என் கருத்து. ஆனால் இம்முறையைக் கைக்கொள்வதற்குத் தெளிந்த நோக்கமும், பாரமார்த்திகத் தகுதியும் ஏற்கெனவே இருத்தல் வேண்டும். ஆசிரியருக்கும் மாணுக்கனுக்கும் இடையே எங்கு அன்பு இல்லையோ, மாணுக்கனுடைய ஒழுக்கத் தவறு குறித்து ஆசிரியருக்கு உள்ளம் நிறைந்த துயரம் எங்கு உண்டாக

வில்லேயோ, எவ்விடத்தில் ஆசிரியரிடம் மாணுக்கனுக்கு மரியாதை கிடையாதோ அங்கே உபவாசத்தினுல் எவ்வகைப் பயனும் இல்லே; மற்றும், அதனுல் தீங்கு ஏற்படக்கூடும். ஆதலின் அம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் ஆசிரியர் பட்டினி விரதம் மேற்கொள்வதன் உசிதத்தைப் பற்றிச் சந்தேகத்துக்கு இடமுண்டு. ஆனுல் மாணுக்கனுடைய தவறுகளுக்கு ஆசிரியருடைய பொறுப்பைப் பற்றிய வரையில் சந்தேகமே கிடையாது.

அன்பும் நட்பும்

என்னேப் பற்றி நீங்கள் என்ன நினேத்தாலும், அதனே எனக்கு எழுதத் தயங்கக் கூடாது. அவ்வாறு தயங்குதல் ஒரு குறையே யாகும். எனது சகாக்கள் என்னேப் பற்றிக் கூறும் குறைகளிலிருந்து பல விஷயங்களே நான் கற்று வருகிறேன். ஏனெனில், அவர்களுக்கு என்னிடம் விரோத மனப்பான்மை கிடையாது. ஒரு நண்பனேக் குறித்து, ஏதாவது நம் மனத்தில் தோன்றினுல், உடனேயே அந்த நண்பனிடம் அதனேக் கூறிவிட வேண்டும். அது தான் நட்புரிமைக்கு உண்மையான சோதனே. நாம் நினேத்ததைச் சொல்லா விட்டால், அன்பு என்பது அன்பன்று.

—காந்தியடிகள்

உபவாசமும் உணவுக் கட்டுப்பாடும்

காந்தியடிகள்

என் வாழ்க்கையில் உபவாசமும் உணவுக் கட்டுப் பாடும் முக்கிய இடம் பெறலாயின. பெரும்பாலும், நாவின் சுவை யின்பத்தில் அவாவுடைய மனிதனிடமே காமம், குரோதம் முதலியவையும் குடி கொள்ளுதல் இயல்பு. என் விஷயத்திலும் இப்படியே. காமக் குரோ தங்களையும், சுவைப் புலனையும் அடக்கும் முயற்சியில் எனக்கு எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டன. அவற்றை முழுதும் அடக்கிவிட்டதாக நான் இன்னமும் சொல்ல முடியாது. உணவு விஷயத்தில் நான் பெரும் கட்டுப் பாடு செய்திருப்பதாய் நண்பர்கள் கருதுகிறார்கள். நான் அப்படிக் கருதவில்லை. இவ்வளவேனும் கட்டுப்பாடு செய்து கொண்டிராவிடில், விலங்குகளைவிட இழிந் தவனாகி, நீண்ட நாளைக்கு முன்பே நாசமடைந் திருப்பேன்.

உபவாசத்தினால் உடம்பிலிருந்து கழிவுப் பொருள் கள் போய்விடுகிறபடியால், பின்னர் உணவு அதிக சுவை யாய் இருப்பதையும், பசி அதிகமாவதையும் கண்டேன். ஆகவே, உபவாசம் புலனின்பம் நுகர்தற்கும் சாதகமாக லாம் என்று அறிந்து திடுக்கிட்டேன்.

மனிதர் சுவைப்புலனுக்கு இன்பமளிப்பதற்காகச் சாப்பிடவே கூடாது. உடலைப் பாதுகாக்க மட்டும் உணவு அருந்த வேண்டும். ஒவ்வொரு புலனும் உடம்புக்கும்,

உடம்பின் மூலமாய் ஆன்மாவுக்கும் ஊழியம் செய்யத் தொடங்கும்போது, அவ்வற்றின் தனிச் சுவைகள் மறைந்துவிடுகின்றன. அதன் பிறகே, இயற்கையாக அப்புலன்களுக்கு ஏற்பட்ட கடமையை அவை செய்யத் தொடங்குகின்றன.

இயற்கையோடு இயைந்த இந்நிலையை அடைவதற்கு எவ்வளவு சோதனைகள் நடத்தினுலும் போதுமானவை யாகா; எவ்வளவு அரிய தியாகங்களும் அதிகமாகா. ஆனுல் துரதிர்ஷ்ட வசமாக இக்காலத்தில் அதற்கு நேர்மாருன திசையை நோக்கி நாம் போய்க் கொண்டிருக்கிரும். அழியக்கூடிய இந்த உடலை அலங்கரிப்பதற்காகவும், இன்னும் சில நிமிஷங்கள் அதை உயிருடன் வைத்திருப்பதற்காகவும், கணக்கற்ற உயிர்ப்பிராணிகளைக் கொல்ல நாம் வெட்கப்படுகிரு மில்லை. இதன் முடிவு, நம்மை நாமே கொன்றுகொண்டு உடலும் ஆன்மாவும் சர்வநாசம் அடைவதேயாகும்.

பழய நோய் ஒன்றைக் குணப்படுத்தும் முயற்சியில் நூறு புதிய நோய்களை உற்பத்தி செய்து கொள்கிரும். புலனின்பம் நுகரும் முயற்சியில் ஈடுபட்டு முடிவில், அவ்வின்பம் நுகரும் சக்தியையே இழந்து விடுகிரும். இவையெல்லாம் நம் கண் முன்னே நடப்பவை. ஆனுல் பார்க்கமாட்டோம் என்று கண்ணை மூடிக் கொள்பவனைப் போன்ற குருடன் வேறு யார்?

உணவுக்கும், பிரமசரியத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. எனினும் மன நிலையே எல்லாவற்றிலும் பிரதானமானது என்பதில் சந்தேகமில்லை.

தெரிந்தே மனத்தை அசுத்தமாய் வைத்திருப்போர், உபவாசத்தினுல் தூய்மை பெற முடியாது. உணவுச் சீர்

திருத்தத்தினுல் மட்டும் அவர்கள் மனத்தூய்மை பெற மாட்டார்கள். தீவிர ஆத்ம சோதனையினுலும், ஆண்டவனிடம் அடைக்கலம் புகுவதினுலும், அவனுடைய அருளினுலுமே, மனத்திலுள்ள கெட்ட ஆசையை வேருடன் பறித்து எறியக்கூடும். ஆனல் மனத்துக்கும் உடலுக்கும் நெருங்கிய சம்பந்தம் இல்லாமல் இல்லை; சிற்றின்பப் பற்றுள்ள மனம் எப்போதும் இனிப்பான பொருள்களையும் சுக போகங்களையும் விழைகிறது. மனத்தின் இந்த இயல்பை அடக்க முயலுவோனுக்கு, உணவுக் கட்டுப்பாடுகளும் உபவாசமும் அவசியமாகின்றன. கீழான மனம், புலன்களை அடக்கி ஆள்வதற்குப் பதிலாக, அவற்றின் அடிமையாகி விடுகிறது. ஆதலின், மனத்தூய்மை பெறும் விருப்பமுள்ளோனுக்கு, உடலைத் தூய்மையாக வைத்திருப்பதும், கிளர்ச்சி தராத உணவுகளை உண்பதும், அடிக்கடி உபவாசம் இருப்பதும் உதவிகளாகின்றன.

எனவே, உணவுக் கட்டுப்பாடுகளையும், உபவாசத்தையும் அலட்சியம் செய்தல் தவறு. அவற்றையே பரம முக்கியமாகக் கருதி, அவற்றினுலேயே லட்சியம் கைகூடி விடும் எனக் கருதுவதும் தவறே யாகும். எவருடைய உள்ளம் புலனடக்கத்தை நோக்கித் திரும்பி யிருக்கிறதோ, அவருக்கு உணவுக் கட்டுப்பாடுகளும் உபவாசமும் உதவியாய் இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஒரு சம்பவம்

கார்ந்தியடிகள்

1914-ஆம் ஆண்டில், நண்பர் காலன்பாக்குடன் தென்னுப்பிரிக்காவிலிருந்து லண்டனுக்குக் கப்பலில் பிரயாணம் செய்தேன். அப்பிரயாணத்தில் நிகழ்ந்த சில சம்பவங்கள் குறிப்பிடத் தக்கவனவாகும்.

தூரத்திலுள்ள பொருள்களை அருகில் உள்ளது போல் காட்டும் "பைனுகுலர்" என்னும் இரட்டைக் கண்ணுடியில், காலன்பாக்குக்கு விருப்பம் அதிகம். அவர் வைத்திருந்த பைனுகுலர் விலையுயர்ந்தது. அதனைக் குறித்துத் தினந்தோறும் எங்களுக்குள் விவாதம் நடக்கும். நாம் அடைய விரும்பும் எளிய வாழ்க்கை லட்சியத்துக்கு, அது பொருந்தாத சாமான் என்று அறிவுறுத்த முயன்றேன். எங்கள் அறையில், காற்றுத் துவாரத்துக்கு அருகில் ஒருநாள் நாங்கள் நின்றுகொண்டிருக்கையில் இந்த விவாதம் பெரிதும் பலத்துவிட்டது.

"இந்தக் கண்ணுடி நமக்குள் விவாதம் விளைவிக்க இடம் கொடுப்பானேன்? இதைக் கடலில் எறிந்து ஏன் விவாதத்தை முடித்துவிடக்கூடாது?" என்றேன்.

"சனியனை எறிந்தே விடுங்கள்" என்ருர்.

"உண்மையாகவே சொல்லுகிறேன்" என்றேன்.

"நானும் அப்படித்தான்" என்ருர் காலன்பாக்.

உடனே, கண்ணுடியைக் கடலில் வீசி எறிந்து விட்டேன். கண்ணுடியின் விலை ஏழு பவுன்; சுமார் நூறு ரூபாய். ஆனல் கண்ணுடியின் மதிப்பு அதன் விலையைப் பொறுத்ததன்று. காலன்பாக்குக்கு அதனிட மிருந்த மோகமே, அதற்கு அதிக மதிப்பு அளித்தது. அதைத் தொலைத்துவிட்ட பின்னர், காலன்பாக் அது குறித்து வருத்தப்படவேயில்லை.

தனது புத்தி ஒப்புக் கொள்ளும் எதையும் நடை முறையில் கொண்டுவந்து விடும் அதிசய ஆற்றல் காலன்பாக்கினிடம் இருந்தது.

இம்மாதிரியாக, தினந்தோறும் நாங்கள் ஏதேனும் புதிய உண்மையை அறிந்து வந்தோம். இருவரும் சத் திய மார்க்கத்தில் நடக்க முயன்றவர்களே யன்ரே?

சத்தியத்தைத் தேடிச் செல்லும் பொழுது, கோபம், சுயநலம், பகைமை முதலியவை இயற்கையாகவே நழுவி விடுகின்றன. இல்லாவிடில் சத்தியத்தை அடைவது இயலாத காரியமாகும்.

காமக் குரோதங்களுக்கு வயமான மனிதன் நல்ல எண்ணங்கள் உடையவனுக இருக்கலாம்; உண்மையே பேசலாம். ஆனல் அவன் ஒருக்காலும் சத்தியத்தைக் காணமாட்டான். அன்பு—பகை, இன்பம் — துன்பம் எனும் இரட்டைக் குணத் தொகுதியிலிருந்து விடுதலை பெறுவதே, சத்தியத்தைத் தேடும் முயற்சியில் வெற்றி பெறுவதாகும்.

காந்தியடிகள் கருத்து

மனிதன் வேறு: செயல் வேறு

மனிதன் வேறு, அவனுடைய செயல் வேறு என்பதை நன்கு அறிந்து கொள்ளவேண்டும். நற்செயலைப் பாராட்டுதலும், தீச் செயலைக் கண்டித்தலும் முறையே. ஆனால் நற்செயல் புரியும் மனிதன் மரியாதைக்கும், தீச் செயல் புரிவோன் இரக்கத்துக்குமே உரியவனாகிறான். "பாவத்தைப் பகை; பாவியைப் பகையாதே" என்னும் உபதேசத்தை அறிந்து கொள்ளுதல் மிக எளிது. ஆனால் நடைமுறையில் அந்த உபதேசத்தைக் கடைப் பிடித்தல் மிக அரிது. பகைமை என்னும் நஞ்சு, உலகில் பரவுவதற்குக் காரணம் இதுதான்.

ஓர் ஏற்பாடு அல்லது முறை தீயதானால், அதை எதிர்த்துத் தாக்குதல் முற்றும் நியாயமான காரியம். ஆனால் அம்முறையை ஏற்படுத்திய மனிதனைத் தாக்குதல் தன்னையே தாக்கிக் கொள்வதாகுமேயன்றி வேறில்லை. ஏனெனில் நாம் எல்லோரும் ஒரே மண்ணில் செய்த பாண்டங்களேயாவோம். ஒரே கடவுளின் புதல்வர்களாதலால், நம்மிடத்திலுள்ள தெய்வீக சக்திகளும் மகத்தானவை. ஒரு மனிதனை அலட்சியம் செய்தாலும், அத் தெய்வீக சக்திகளை அலட்சியம் செய்வதேயாகும். இதனால் அம் மனிதனுக்கு மட்டுமின்றி உலக முழுவதற்கும் தீங்கு செய்தவர்கள் ஆவோம்.

கெட்ட நினைவுகள்

கெட்ட நினைவுகளால் கவலைப்படும் மனமே, நாமாக உண்டாக்கிக் கொள்ளும் நரகம். இதை நீங்கள் உணர்ந்தால், அதனைத் தவிர்ப்பதற்கு வழிவகை காண்பது உங்களுக்குச் சுலபமாக இருக்கும்.

கெட்ட நினைவுகள் வந்ததைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம். அவை தோன்றிய நினைவே யில்லாமல் முன்னேற முயலுங்கள்.

மனிதனுக்கு, இடறி விழ நேருவது சகஜம். அப்படி இடறி விழ இருந்ததையும், அதன் விளைவையும் குறித்து உட்கார்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. அதனைத் தவிர்த்து முன்னேற முயல வேண்டும். அம் முயற்சியில் அது மறந்து போகும். அதனால் வலிமை பெற்று, அந்த வலிமையினால் மறுமுறை தடுக்கி விழும் சந்தர்ப்பங்கள் குறையும்.

புத்திமதி

வியாபாரத்தில் அதிக நஷ்டமடைந்து, பெரும் கவலைக்கு உள்ளான ஒருவருக்குக் காந்தியடிகள் கூறிய புத்திமதி.

1. பணத்தைச் சம்பாதிப்பவனுக்கு, அதனை இழக்கும் உரிமை உண்டு.

2. பணத்தை இழப்பதில் அவமானம் ஒன்றுமில்லை. ஆனால், பணத்தை இழந்த பின்னர், அதனை மறைப்பதுதான் அவமானமும், பாவமும் ஆகும்.

3. வருவாய்க்கு அதிகமாகச் செலவு செய்யாதே.

4. கடன்காரர்கள் அனைவருக்கும் திருப்பிக் கொடுக்க வேண்டிய பூராத் தொகையும் உங்களிடம் இல்லாவிட்டால், அதற்குத் தலைகுனிய வேண்டியதில்லை.

5. கடன் வாங்கியவன், தன்னிடமுள்ள எல்லாவற்றையும் கடன்காரர்களுக்கு கொடுத்துவிட்டால், அவன் கடன் தொகை முழுவதையும் திருப்பிக் கொடுத்தவனாவான்.

6. எக்காலத்திலும் கடன் வாங்கி வியாபாரம் செய்யக்கூடாது.

பத்திரிகைகளின் லட்சியம்

பத்திரிகைகளின் லட்சியம் பொதுநல ஊழியமாகவே இருத்தல் வேண்டும் என உணர்ந்தேன். பத்திரிகைகளின் சக்தி அபாரமானது. ஆனால் கரையில்லாத ஜலப்பிரவாகம் நாட்டையெல்லாம் மூழ்கடித்துப் பயிரைப் பாழாக்குவதுபோல், கட்டுக்கு உட்படாத பேனாவும் அழிவு வேலைக்கே பயன்படுகிறது. கட்டுப்பாடே இல்லாதிருப்பதைவிட வெளியிலிருந்து ஏற்படும் கட்டுப்பாடு தீமை பயப்பதாகும். பத்திரிகைகள் தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடு ஏற்படுத்திக் கொள்வதில்தான் நன்மையுண்டு. தற்பொழுது உலகில் உள்ள பத்திரிகைகளில், இப் பரீட்சையில் தேறக்கூடியவை எவ்வளவு? உபயோகமற்ற பத்திரிகைகளை யார் நிறுத்துவது? உபயோகமானவை, உபயோகமில்லாதவை என்று முடிவு செய்வது யார்? உலகில் நன்மை தீமைகள் எப்போதும் கலந்திருப்பதைப்போல், பயனுள்ள பத்திரிகைகளும், பயனில்லாப் பத்திரிகைகளும் இருக்கவே செய்யும். மனிதன் தன் அறிவினால் ஆராய்ந்து பயனுள்ளதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆத்மத் தூய்மை

ஆத்மத் தூய்மை செய்து கொள்ளாதவரையில் உலகிலுள்ள ஒவ்வோர் உயிரினியிடத்தும் தன்னை ஒன்று படுத்திக் கொள்ளுதல் இயலாத காரியம்.

ஆத்மத் தூய்மையின்றி அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடிக்கலாம் என்று எண்ணுவது வெறும் பகற் கனவே யாகும்.

இதயப் பரிசுத்தம் இல்லாதவன் ஒருநாளும் இறை யொளி காண முடியாது.

ஆத்மத் தூய்மை பெறுவதென்றால், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தூய்மை பெற்றே யாகவேண் டும். சுத்தமும், அசுத்தமும் எளிதில் பரவும் இயல்புடை யன வாதலின் ஒருவன் தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்ள முயலும்போது, தன்னைச் சுற்றிலும் தூய்மை உண்டு பண்ணுகிறான்.

ஆனால் ஆத்மத் தூய்மை நெறி எளிதானதன்று. அது பெரிதும் கஷ்டமான செங்குத்தான பாதையாகும். ஒருவன் பூரண பரிசுத்தனாக வேண்டுமானால், மனோ வாக்குறுதி காயங்களினால், காமக் குரோதங்களை முற்றும் விலக்க வேண்டும். நேயம்—பகைமை, விருப்பு—வெறுப்பு என்னும் சுழல்களிலிருந்து வெளிப்படவேண்டும். எவ் வளவோ இடைவிடா முயற்சிகள் செய்தும், நான் இன் னும் அத்தகைய மூவகைத் தூய்மை பெற்றவனில்லை என்பதை அறிந்துள்ளேன்.

ஆயுத பலத்தினால் வெளி உலகை வெற்றி கொள் வதைவிட, நுட்பமான காமக்குரோத உணர்ச்சிகளை வெல்லுதல் கஷ்டமானது.

மனம்

மனத்திலிருந்து உணர்ச்சி தோன்றும். மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளாவிட்டால், அவை நம்மைத் தவருன வழிக்கு அழைத்துச் செல்லும்.

கட.வுள், கடவுளைப் பற்றிய ஞானம் உற்பத்தியாகும் இடம் மனமே. அத்தகைய இடத்தை அசுத்தப்படுத்திஞல், அதற்குப் பரிகாரமே இல்லே. அதன் தூய்மை உறுதிப்பட்டால் வேருென்றுமே வேண்டாம்.

காய் கறிகள்

உலகத்தின் எந்தப் பகுதியிலாவது, காய்கறிகளை மிகவும் அதிகமாகக் கெட்டுப்போகும்படி சமையல் செய்வது உண்டென்ருல், அது இந்தியாதான்.

பலவகை செயற்கை ருசிகளை நாம் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிருேம். பல மசாலாப் பொருள்களைக் கண்டுபிடித்திருக்கிருேம். எனவே, அந்த மசாலாவுக்காக காய் கறிகளைச் சாப்பிடுகிருேம்.

ராமாயணம் போதிக்கும் பாடம்

போராட்ட மில்லாத வாழ்க்கை சப்பென்று இருக்கும். அத்தகைய வாழ்க்கையை எதிர் பார்க்கக் கூடாது. ஆதலால், வாழ்க்கைப் போராட்டத்தில் அடிபட்டுக் கரை யேறுதலே அறிவுடைமை. ராமாயணம் போதிக்கும் அரிய பாடங்களிலே இது ஒன்று.

—காந்தியடிகள்

கொய்த மலர்கள்

காந்தியடிகள்

பிரார்த்தனை

1. பணிவே உருவானாய்! ஏழையர் பழங்குடில்
தொறும் எழுந்தருளும் பரனே!
கங்கை காவிரி முதலாய ஆறுகள் வளந்தரும்
எழில்மிகு இந்நாடு முற்றிலும் உன்னைத்
தேடியலையும் வரம் கொடு.

2. எப்பொருள் யார் வாய்க் கேட்பினும், அதன் மெய்ப்
பொருள் உணரும் வெள்ளுயிர் எமக்கருள்
இந்நாட்டினர் தம் சுகதுக்கங்களில் நாங்களும்
கலந்து வாழும்
திறனும் பணிவும் அடியேர்க்குத் தந்தருள்வாய்.

3. பாத தூளியிலும் இழிந்தாராய்க் கருதுவோர்க்கே
சரணம் தரும் பரமா!
எங்கள் கோடிக் கணக்கான மக்களுடன் இணை
பிரியாது நின்று
நட்பும் பணிவும் பூண்டு நலம் செயும் உளம்
எமக்குத் தருவாய்.

4. யாம் எமது என்பதை வேர்முதல் மாய்த்து,
தியாகமே வடிவாகி,
எங்கள் வாழ்வில் சத்துவமும் பணிவும் நிறைந்து,
இப்பெரு நாட்டின் மர்மம் புரிந்து, அதற்குப் பக்தி
யுடன் பணிபுரியும் உயர்நிலை எமக்கு அருள்வாய்.

கட்டுப்பாடு

வெளியிலிருந்து விதிக்கப் பெறும் கட்டுப்பாடுகள் வெற்றி பெறுதல் அருமை. ஆனல் அவற்றை நமக்கு நாமே விதித்துக் கொள்ளும்போது நல்ல பயன் அளிக்கின்றன.

ஆத்ம நலம்

எந்த விதமான தன் மறுப்பும் ஆத்ம நலம் தருவதாகும்.

கடமை

ஒருவனுடைய கடமை என்னவென்று தெளிவாக உணருதல் எப்போதுமே சாத்தியமாய் இருப்பதில்லை. சத்திய உபாசகன் அடிக்கடி இருட்டில் தடவ வேண்டியவனுகிருன்.

மர்மம்

மனிதன் தனது செயல்களுக்கு எவ்வளவு தூரம் எஜமானன், எவ்வளவு தூரம் சந்தர்ப்பங்களுக்கு அடிமை, சொந்த முயற்சி எந்த அளவுக்குப் பயன்படும், விதி எவ்விடத்தில் குறுக்கிடுகிறது—முதலிய விஷயங்கள் நம்மால் அறியக்கூடாத ரகசியங்களாக இருக்கின்றன. என்றும் அவை மர்மமாகவே இருக்கும்.

மனித இயல்பு

மனிதனுக்குக் கெட்ட குணங்கள் எளிதில் படிவது போல, நல்ல குணங்கள் படியா.

பண விஷயம்

மற்ற எல்லா விஷயங்களிலும் ஜனங்களின் வாக்குறுதியை நம்பலாம்; ஆனல் பண விஷயம் ஒன்றில் மட்டும் நம்புவதற்கில்லை. கொடுக்க ஒப்புக் கொண்ட தொகையைத் தாமதமின்றிக் கொடுக்கும் மனிதரை நான் கண்டதே கிடையாது.

பிளவு

ஒருமுறை ஏற்பட்டுவிட்ட பிளவு, பின்னர் எவ்வளவு தான் ஒட்டுப்போட்டாலும் முன்போலாகி விடுமா ?

தொண்டு

மகிழ்ச்சி இல்லாமல் செய்யும் தொண்டினுல், அதைச் செய்பவனுக்கேனும் ஏற்றுக் கொள்பவனுக்கேனும் நன்மை கிடையாது. ஆனுல் மகிழ்ச்சியுடன் செய்யப் பெறும் தொண்டிற்கு முன்பு மற்ற இன்பங்களும் சுக போகங்களும் சூரியன் முன்பு மின்மினியாகின்றன.

விருந்துண்ணல்

மேனுட்டைப் போல, விருந்துண்ணல் ஓர் அருங் கலையாக ஆக்கப்பட்டிருப்பது வேறெங்கும் இல்லை.

சுவை

சுவை என்பது நாவில் இல்லை; மனத்திலேயே இருக்கிறது.

வீண் வேலை

நடந்துபோன நிகழ்ச்சிகளின் நியாய அநியாயங் களைப் பற்றிய விசாரணையில் இறங்குவது வீண் வேலை யாகும். ஆனுல் அவற்றை உள்ளபடி அறிந்துகொள்ள லும், கூடுமானுல் வருங்காலத்துக்கு அவற்றினின்றும் படிப்பினை கற்றுக் கொள்ளுதலும் பயனுடையதாகும்.

நியாயம்

எதிரிகளுக்கு நியாயம் செய்வதினுல் மட்டும் நாம் விரைவில் நியாயம் பெற முடியும்.

மதம் மாறுதல்

ஒரு மதம் விட்டுப் பிறமதம் புகுந்தவன், புதிய மதத் தினிடம் அதிலேயே பிறந்து வளர்ந்தவர்களைவிட அதிக மான பற்றுக் கொண்டிருப்பது இயல்பு.

பெருங் குறை

வேண்டுமென்றே தன்னை யறியாமலோ உண்மையை மறைத்தும் திரிந்தும் மிகைப்படுத்தியும் கூறும் குணம் மனிதனுக்கு இயற்கையாக ஏற்பட்டுள்ள ஒரு பெருங் குறையாகும்.

தெய்வ வாக்கு

பொதுஜன வாக்கு, தெய்வ வாக்காகும்.

பயனற்ற பேச்சு

வார்த்தைகளை எண்ணிப் பேசுவோன், யோசனையற்ற மொழிகளைக் கூறமாட்டான். பேசுவதற்கு ஆசைப்படும் எத்தனையோ பேர்களை நாம் காண்கிறோம். எந்தக் கூட்டத்திலும் சரி ஜனங்கள் பேசுவதற்கு அனுமதிக் கோரும் சீட்டுக்களை அனுப்பிக் கூட்ட தலைவரைத் தொந்தரவு செய்யாமல் இருப்பதில்லை. அனுமதியளித்தால் பேசுகிறவர் காலவரையறையைக் கடந்து விடுவதும் இன்னும் கொஞ்ச நேரம் கேட்பதும் அனுமதியில்லாமல் பேசிக் கொண்டே போவதும் சர்வ சாதாரணம். இப் பேச்சுக்களால் உலகத்துக்கு எவ்வித நன்மையும் விளைவதாகச் சொல்ல முடியாது.

தன்னலம்

தன்னலம் மனிதனைக் குருடனாக்கி விடுகிறது.

உள்ளங் கவர்ந்தவர்

தற்கால மனிதர்களில் என் உள்ளத்தைக் கவர்ந்து என் வாழ்க்கையின் போக்கைச் சமைத்தவர் மூவர். ராய் சந்தர் தமது ஒழுக்க முள்ள வாழ்க்கையினாலும், டால்ஸ்டாய் "ஆண்டவன் ராஜ்யம் உனக்குள்ளே" என்ற புத்தகத்தாலும், ரஸ்கின் என்பார் "முடிந்த நிலை" என்ற நூலினாலும் எனது வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாயினர்.

உண்மை நட்பு

உண்மை நட்பு என்பது ஆன்ம ஒருமைப்பாடு.

குரு

ஆத்ம சாதனத் துறையில் குருவின் முக்கியத்து வத்தைப் பற்றிய இந்து மதக் கொள்கையில் எனக்கு நம்பிக்கை உண்டு. குரு உபதேச மின்றி ஒருவன் மெய் ஞானம் பெற முடியாது என்னும் தத்துவத்தில் பெரிதும் உண்மை இருக்கிறது. உலகியல் கல்விப் பயிற்சிக்கு வேறு வழியில்லாவிடில், அரை குறையாகத் தெரிந்த உபாத்தியாயரிடமே செல்லலாம். ஆனல் பாரமார்த்திக ஞானம் பெறுவதற்கு இது கூடாது. அதற்குப் பரி பூரண ஞானியையே குருவாகக் கொள்ள வேண்டும்.

பொறுமை

பொறுமை, காரண காரியங்களை ஆராய்வதில்லை.

கடவுளின் புதல்வர்கள்

கடவுளுக்குப் புதல்வர்கள் இருக்கக்கூடுமானல்' நாம் எல்லோரும் அவருடைய புதல்வர்களே.

தொண்டு

ஆண்டவனை அறிதல் தொண்டின் மூலமாகவே இயலும் என்று நான் உணர்ந்தேன். ஆதலின் தொண்டு செய்யும் மதத்தையே என்னுடைய மதமாகச் செய்து கொண்டேன். என்வரையில், தொண்டு என் பது நாட்டின் தொண்டேயாகும்.

இரண்டும் ஒன்றே

மதமும் ஒழுக்க நெறியும் ஒன்றே.

பகைவர்கள்

பகைவர்கள் என்று கூறப்படுவோர், துஷ்டர்கள் என்று எவ்வாறு கூறமுடியும்? அவர்கள் பகைவர்கள்

என்பதால் அவர்கள் செய்வதே தவறு என்று எப்படி ஏற்படும்?

உள்ளதைவிடப் பெரிது

எந்த விஷயத்தையும் தூரத்திலிருந்து கேள்விப் பட்டால் அது உள்ளதைவிடப் பெரிதாகத் தோன்றும்.

ஆயிர மடங்கு

மனைவி கணவனிடம் காட்டும் அன்பைவிட வேலைக் காரன் எஜமானனிடம் காட்டும் விசுவாசம் ஆயிர மடங்கு பாராட்டுதற்குரியது.

பயங்கரமான பொறுப்பு

"இயற்கைக் குணத்தை மாற்ற யாரால் முடியும்?" என்று ஒரு முதுமொழி யுண்டு. பிறப்புக்கு முன்னுலி ருந்தே ஏற்பட்டுவிட்ட குணங்களைக் கைவிடுதல் எளி தன்று. தான் வளர்ச்சி பெற்ற வழியே, தன் புதல்வர் களும் தன் பாதுகாப்பில் உள்ளவர்களும் வளர்ச்சி யுறு வார்கள் என்று எதிர்பார்ப்பது வீண் ஆசையே யாகும். பெற்ருேராய் இருப்பது எவ்வளவு பயங்கரமான பொறுப்பு?

வக்கீல் தொழில்

குற்றத்தை மறைப்பதற்கு ஒருவனுடைய புத்தி கூர்மையை உபயோகப்படுத்தலாம் என்று கண்டேன். எனவே புத்தியினிடமே எனக்கு அருவருப்பு உண்டா யிற்று. வக்கீல் தொழில்மீது அப்போதுதான் எனக்குப் பெரு வெறுப்பு ஏற்பட்டது.

உண்மைக்கு விரோதமில்லாமல் வக்கீல் தொழில் நடத்துவது சாத்திய மன்று. ஆனல் வக்கீல் தொழிலில் உண்மையைக் கடைப்பிடித்தாலும் கூட, அத் தொழிலே அடிப்படையில் தீமையானது.

சமூக ஊழியம்

சமூக ஊழியத்துக்கே வாழ்நாளைச்செலவிட வேண்டுமாயின் பிள்ளைப் பேற்றில் அவாவையும் பொருளாசையையும் அறவே ஒழித்து குடும்பக் கவலைகளினின்றும் நீங்கிய வானப் பிரஸ்த வாழ்வை மேற்கொள்ள வேண்டும்.

உடற் பயிற்சி

ஒருவனுக்கு எவ்வளவு அதிகமான வேலை யிருந்த போதிலும் சாப்பாட்டுக்குச் சாவகாசம் ஏற்படுத்திக் கொள்வதுபோல் உடற் பயிற்சிக்கும் சாவகாசம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏமாற்றுதல்

பிறரை ஏமாற்ற முயல்வோன், தன்னையே ஏமாற்றிக் கொள்கிருன்.

அவமானம்

குற்றம் செய்வது அவமானமே ; அதற்காகச் சிறை செல்வது அவமானம் அன்று.

மரியாதை

மரியாதை என்பது அந்தந்தச் சமயத்துக்குக் கைக் கொள்ளும் பேச்சு நயம் மட்டும் அன்று. எதிரிக்கும் நன்மை செய்ய வேண்டும் என்னும் அந்தரங்க விருப்பமும் மனப்பூர்வமான பெருந்தன்மையுமே உண்மையான மரியாதையாகும்.

நியாயமாக மதிப்பிடல்

ஒருவன் தன்னுடைய தவறுகளை மிகைப்படுத்தியும் பிறருடைய தவறுகளைச் சிறிதாக்கியும் பார்க்கப் பயின்ருல் மட்டுமே இரண்டையும் நியாயமாக மதிப்பிடக் கூடும் என்பது என் கொள்கை.

குணம்

ஒருவனுடைய குணத்தை நிர்ணயிக்க, அவனுடைய வெளிப்படையான நடத்தை மட்டும் போதிய ஆதாரமாக மாட்டாது.

ஜனநாயகம்

ஜனநாயகக் கொள்கையை உண்மையில் பாதுகாக்க வேண்டுமானுல் மக்கள் தீவிர சுதந்திர உணர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும் ஒருமை உணர்ச்சியும் கொண்டவராய் இருக்க வேண்டும்.

இறுதி எல்லே

தாழ்மைக் குணத்தின் இறுதி எல்லே அஹிம்சையாகும்.

மோட்சமில்லே

ஒருவன் தன்னுடைய சொந்த விருப்பத்தினுல், தன்னேத் தன் சகோதர உயிர்ப்பிராணிகளுக்கெல்லாம் கடையனுகக் கருதாத வரையில், அவனுக்கு மோட்சமில்லே.

கடினம்

குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட மனிதன் எவ்வாறு நடந்து கொள்வான் என்று நிச்சயமாகக் கூறுதல் கடினம்.

அன்பு

அன்பு என்னும் ஆயுதத்தினுல் தகர்த்து எறிய முடியாத தடையும் உண்டோ?

எச்சரிக்கை

பொது ஊழியத்தில் ஈடுபட்டவன், தானே ஆராய்ந்து உண்மை யென்று தேருத விஷயங்களேச் சொல்லக் கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக சத்திய

உபாசகன் மிகவும் எச்சரிக்கை உடையவனுக இருத்தல் வேண்டும். தான் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளாத விஷயத்தைப் பிறர் நம்பும்படி செய்வது சத்தியத்துக்கு ஊறு செய்வதாகும்.

உண்மையாளனுன ஒருவன் எச்சரிக்கை உடையவனுகவும் இருத்தல் வேண்டும்.

முற்பிறப்பு

முற்பிறப்பின் வாசனைகள் பிறருடைய உதவியில்லாமல் செய்து விடுகின்றன.

தூய அன்பு

தூய அன்பினுல் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. ஒருவனுடைய நோக்கம் மட்டும் தூயதாய் இருந்தால், அவனை இறைவன் முடிவில் காத்தருள்வான்.

தன்னந் தனியே

இறைவனது நண்பனுக இருக்க விரும்புவோன் இவ்வுலகில் தன்னந்தனியனுக இருக்க வேண்டும்.

ஒரே குடும்பம்

நன்ருகச் சிந்தித்துப் பார்த்தோமானுல், ஜாதி, இனம் என்னும் வேறுபாடுகள் கற்பனையே என்று விளங்கும். உண்மையில் நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே யாவோம்.

நல்ல காரியம்

நல்ல காரியம் எதுவும் முடிவில் பயனளித்தே தீரும்.

காரணம்

என்னுடைய சகோதரரின் துன்பங்களுக்கெல்லாம் காரணம், அவர் என்னிடம் வைத்திருந்த அபார அன்பே யாகும்.

முக்கியம்

புற வாழ்க்கையில் உண்டாகும் மாறுதலைக் காட்டிலும், உள்ளத்தில் உண்டாகும் மாற்றமே முக்கியம்.

சரியன்று

மணமக்களுக்குள் இதய ஒற்றுமை ஏற்பட்டிருக்கும் போது பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டுக் கல்யாணத்தைத் தள்ளிவைத்தல் சரியன்று. வறுமை, கல்யாணத்துக்கு ஒரு தடையானல், ஏழைகள் கல்யாணமே செய்து கொள்ள முடியாது.

மேன்மை

உடலின் உறவைக் காட்டிலும் ஆன்ம உறவு மிக மேன்மை பொருந்தியது.

யுத்தக் குற்றம்

யுத்த வீரர்கள், யுத்த ஊழியம் செய்பவர்கள் என்னும் வேற்றுமை நான் பாராட்ட வில்லை. கொள்ளைக் காரரின் மூட்டை தூக்கவும், அவர்கள் கொள்ளையிடும் பொழுது காவல் இருக்கவும் அவர்கள் காயம்பட்டால் பணிவிடை செய்யவும் ஒப்புக் கொள்பவன், கொள்ளைக் காரர்களைப் போலவே கொள்ளைக் குற்றத்துக்கு ஆளாகிருன். அதே மாதிரியாக, யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்குப் பணிவிடை செய்வோரையும் யுத்தக் குற்றம் சாராமல் விடாது.

சபதம்

சபதம் எத்துணைத் தெளிவானதாய் இருப்பினும், மக்கள் தங்களுக்கு அனுகூலமாக அதைத் திரித்துப் பொருள் கொள்கிருர்கள். மக்கள் சமூகத்தில் எல்லா வகுப்புக்களிலும், அரசன் முதல் ஆண்டி வரை இத் தகையோரைக் காணலாம். சுயநலத்தினுல், அவர்கள்

குருடர்களாகித் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதல்லாமல் உலகத்தையும், கடவுளையும் ஏமாற்ற முயலுகிறார்கள்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் யார் முன்னிலையில் சபதம் செய்யப்படுகிறதோ, அவர்கள் கூறும் விளக்கத்தை உண்மையாக ஏற்றுக் கொள்வதே சிறந்த முறையாகும். இரு பொருள்கள் தரக்கூடிய சபதங்கள் விஷயத்தில் பலத்தில் குறைந்தவர்களின் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளுதல் அடுத்தபடியான முறை. இவ்விரண்டு முறைகளும் நிராகரிக்கப்பட்டால், அசத்தியத்தில் வேர் கொண்டவையான சச்சரவும் அநீதியும் விளையும்.

கணக்கு

எந்த அமைப்புக்கும் வரவு செலவுக் கணக்கு ஒழுங்காக வைத்திருத்தல் இன்றியமையாத ஒன்றாகும். இன்றேல், அந்த ஸ்தாபனம் விரைவில் கெட்ட பெயர் எடுக்கும் என்பதில் ஐயமில்லை.

சில்லரைச் செலவு

பொதுவேலைகளில் சில்லரைச் செலவுகளே பெருந்தொகைகள் ஆகிவிடும்.

பெரு மர்மம்

மனிதர்கள் தங்கள் சகோதரர்களைத் தாழ்மைப் படுத்துவதனால், தங்களுக்குச் சிறப்பு வருவதாக எண்ணுவது எப்படி என்னும் பெரு மர்மம் இன்னமும் எனக்குப் புலனாகவில்லை.

எத்தனை பாவம்

செல்வம், அதிகாரம், மதிப்பு இவற்றின் பொருட்டு மாந்தர் எத்தனை எத்தனைப் பாவங்களுக்கும் அநீதிகளுக்கும் உள்ளாக வேண்டியிருக்கிறது.

கூடாது

கடமைகளைச் செய்வதற்குப் பலன்களை எதிர் பார்த்தல் கூடாது.

அவசியம்

பகவானுக்குப் பயந்து நடந்து, அவரை நேருக்கு நேர் காண விரும்புவோனுக்கு, எண்ணத்தையும் பேச்சையும் கட்டுப்படுத்தல் எவ்வளவு அவசியமோ அவ்வளவு உணவின் தன்மையிலும் அளவிலும் கட்டுப்பாடு செய்தல் அவசியமாகும்.

பாக்கியம்

பளிங்குபோல் மாசற்ற நடத்தையும் போர் வீரனையும் வெட்கச் செய்யும் தைரியமும் உடைய சில பெண் மணிகளுடன் பழகும் பாக்கியம் நான் பெற்றிருந்தேன்.

உண்மை அழகி

அன்பர் வெஸ்டின் மனைவி ஓர் அழகிய இளம் பெண். உடலின் அழகைக் குறிப்பிடவில்லை. முதன் முதல் நான் அவரைச் சந்தித்தபோது, அவர் உள்ளத்தின் அழகு என்னைக் கவர்ந்துவிட்டது. இதயத் தூய்மையே உண்மை அழகன்றோ ?

பேரானந்தம்

இமய மலையை அளப்பதில் உள்ள இன்பம், வெற்றி மகிழ்ச்சி ஆகியவை நிரந்தரமானவையன்று. தன்னைத் தானே வெற்றி கொள்வதில் பேரானந்தம் உண்டு. இந்த ஆனந்தம் குறைபடாமல் வரவர வளர்ந்து கொண்டே இருக்கும்.

மணம்

மணம் வேலிபோல இருந்து மதத்தைப் பாதுகாக்கிறது. வேலியை அழித்துவிட்டால் அது சிதைந்து

சின்னு பின்னப்பட்டுவிடும். மரத்தின் ஆணிவேர் கட்டுப்பாடு; மணம் என்பது கட்டுப்பாடேயன்றி வேறல்ல.

வெகுமதி

தொண்டுக்குத் தொண்டே வெகுமதி.

ஆசைவலை

மனிதன் விரதம் எடுத்துக் கொள்ளாமையே அவனை ஆசை வலையில் விழச் செய்கிறது.

தவறு

உடல் வலிமை யுள்ளவர்களுக்குப் பிச்சை கொடுத்தல் முற்றிலும் தவறு.

அஹிம்சை

1932-ஆம் ஆண்டில் காந்தியடிகள், வல்லபாய் படேல், மகாதேவ தேசாய் ஆகிய மூவரும் ஏரவாடாச் சிறையில் ஒன்ருக இருந்தனர்.

"நாம் நடக்கும்போது, ஏராளமான எறும்புகள் நம் காலடியில் பட்டுச் சாகின்றன. அவற்றைக் காப்பது எப்படி?" என்று ஒருவன் காந்தியடிகளுக்கு எழுதியிருந்தான். அக் கடிதத்தை மகாதேவ தேசாய் உரக்கப் படித்தார்.

உடனே அருகிலிருந்த வல்லபாய் படேல், "கால்களைத் தலைமேல்தூக்கிவைத்துக்கொண்டு அவனை நடக்கச் சொல்லுங்கள்" என்ருர்.

எனது இயல்பு

காந்தியடிகள்

பெரியவர்களுடைய குறைகளைப் பொறுத்தவரையில், குருடனாய் இருப்பது என் இயல்பு.

எனது மனைவியின் கடமையை எனது உரிமையாக நினைத்துக் கொண்டேன்.

பொய் சொல்லுவது என்பது என்னால் இயலாத காரியம். இந்த ஒரு குணந்தான், நான் பல முறையும் படுகுழியில் வீழாமல் காப்பாற்றியது.

உண்மையில் எனது சங்கோஜ குணம் பலவித அபாயங்களிலிருந்து என்னைக் காப்பாற்றும் கேடயமாக இருந்து வந்திருக்கிறது.

பகிரங்கமாகச் செய்யக்கூடாத ஒரு காரியத்தை ரகசியமாகச் செய்தல் என் இயல்புக்கே முற்றிலும் மாறான தாகும்.

என்னுடைய சொந்தக் குறை எதற்காகவும் நான் நீதிமன்றத்துக்குப் போனதில்லை.

மனச்சான்று வழி நடப்பதில் எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. அதற்கு மாறாக எதுவும் செய்தல் எனக்கு மிகுந்த துயரத்தை அளிப்பதோடு மிகவும் கஷ்டமாகவும் இருக்கும்.

எவனொருவனையும் வேலைக்காரனாகப் பாவித்து வேலை வாங்கி நான் அறியேன்.

பிரிட்டிஷ் அரசாட்சியினிடம் எனக்கிருந்த அளவு விசுவாசமுடைய வேருெருவரை நான் கண்டதில்லை.

நாள் முழுதும் உழைத்துக் களைத்துப் போன பின்னரே படுக்கச் செல்வதென்று உறுதி கொண்டேன்.

பொது ஊழியத்தில் ஈடுபட்டோர், விலையுயர்ந்த வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடாது என்பது என் உறுதியான அபிப்பிராயமாகும்.

என்னைப் படைத்த கடவுளே, என் மனைவியையும் குழந்தைகளையும் படைத்தார். ஆதலின் அவர்களை அவரே காப்பாற்றுவார் என உறுதி கொண்டிருந்தேன்.

ஒரு கொள்கையைப் பரப்புவது என்ருல் அதற்கு நான் ஒரு வழியைக் கடைப்பிடிப்பது வழக்கம். என்னுடைய சொந்த வாழ்க்கையில் அக் கொள்கையை அனுசரிப்பதன் மூலமாகவும், அறிவு வளர்ச்சியில் பற்றுள்ளவர்களுடன் விவாதிப்பதன் மூலமாகவுமே, எந்தக் கொள்கையையும் பரப்பி வருவேன்.

என் வாழ்நாளில் நான் கடன் பட்டதே கிடையாது. கடன் படுதலை மனதார வெறுத்து வந்திருக்கிறேன்.

நான் செய்வது எதையும் மூடுமந்திரமாகச் செய்வதில்லை.

எனது கட்டுரைகளில் ஒரு வார்த்தையேனும் யோசனையின்றி எழுதியதாகவாவது, வேண்டுமென்று மிகைப் படுத்தியோ, பிறரை மகிழ்விப்பதற்காகவோ எழுதியதாகவாவது எனக்கு ஞாபகமில்லை.

ஒற்றுமைக்குத் தடையான காரணங்களை நீக்குவதற்கு ஏற்படும் சந்தர்ப்பம் எதையும் நான் கை நழுவ விடுவதில்லை.

என்னிடம் இயலாத எந்த நற்குணத்தையும் இருப்பதாகப் பாவித்து நடிக்க என்னுல் முடியாது.

குழந்தைகளின் மத்தியில் விளையாடிக் கொண்டிருப்பதைப்போல, எனக்கு மகிழ்ச்சி தருவது வேருென்றுமில்லை.

முகஸ்துதி செய்தவன் மூலமாகவோ, சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிக்கும் முறையிலோ, மனிதர்களைச் சமாதானப் படுத்துவது என் இயற்கைக்கு விரோதமாகும்.

உடலுழைப்புத் தேவையான வேலைகளை எல்லாம் நாமே செய்து கொள்ளவேண்டும் என்னும் ஆவல் வளர்ந்தது.

ஒரு சமயத்தில், உயிர் வாழும் ஆசை, சத்தியப் பற்றினும் வலிமை மிக்கதாகிவிட்டது.

சத்திய தரிசன முயற்சியில் என்னுடைய அனுபவங்களும், சோதனைகளும், எனக்கு ஜீவசக்தியும் ஆனந்தமும் அளித்து என்னைக் காப்பாற்றி வருகின்றன.

ஏழையினும் ஏழையாக ஜனங்களைப்போல் வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது என் அவா.

''சீர்திருத்த'' வெறியினுல் குருடன் ஆனேன்.

சுருட்டுக் குடிக்கும் வழக்கம் அநாகரிகமானது; அருவருப்பானது; தீமை பயப்பது. உலக முழுவதிலும் சுருட்டுப் பைத்தியம் ஏன் இவ்வளவு பரவியிருக்கிறது என்று எனக்குப் புலப்பட்டதே இல்லை. ரயிலில் சுருட்டுக் குடித்துக் கொண்டிருக்கும் மக்கள் அதிகமாக உள்ள பெட்டியில் என்னுல் பிரயாணம் செய்ய முடிவதில்லை. அத்தகைய இடங்களில் எனக்கு மூச்சுத் திணறிப் போகும்.

இவ்வுலகில் எவர்க்கும் நான் அஞ்சேன்; ஆண்டவன் ஒருவனுக்கே நான் அஞ்சி நடப்பேன்; எவரிடத்தும் பகைகொள்ளேன்; எவரது அநியாயத்துக்கும் இணங்கேன்; அசத்தியத்தைச் சத்தியத்தால் வெல்வேன்; அசத்தியத்தோடு போராட எல்லாத் துன்பங்களையும் ஏற்பேன்.

எனது மனச்சான்றுக்கு ஒவ்வாத ஒரு சட்டத்தை என் தந்தையார் நிறுவினும், 'அதற்கு நான் கீழ்ப்படியேன்' என்று சொல்லி, நடக்கும் வழியில் எனது அன்பைப் புலப்படுத்துவேன்.

நான் அரசியல் வாதியா? சமய வாதியா? நான் அரசியல் நாடகம் நடிக்கும் ஒரு சமயவாதி.

கடவுளிடத்திலும், அவரது வல்லமையினிடத்திலும், அவரது அன்பினிடத்திலும் எனக்குள்ள உறுதியை அசைத்தல் முடியாது. குயவன் கையிலுள்ள களிமண் போல நான் இருக்கிறேன்.

உலகிலுள்ள பெருமைச் சமயங்களில் எதைக் குறை கூறுவதிலும் நான் கலந்து கொள்ளேன்.

ஒரு வேலையை ஏற்றுக் கொண்டால், அதில் முழுதும் ஈடுபடுதல் எனது வழக்கம்.

மண மக்களுக்கு

காந்தியடிகள்

திருமணத்தினால் நீங்கள் பிணைக்கப் பெறுகிறீர்கள். உற்ற நண்பர்கள் என்ற முறையிலும், சம அந்தஸ்து உடையவர்கள் என்ற முறையிலும் கணவனை ஸ்வாமி (எஜமான்) என்று அழைத்தால், மனைவியை ஸ்வாமினி (எஜமானி) என்று அழைக்கிறோம். ஒருவருக்கொருவர் எஜமானராகவும், கூட்டாளியாகவும் இருந்து, வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய காரியங்களையும் கடமைகளையும் நிறைவேற்றி வைக்க ஒத்துழைக்க வேண்டும்.

இளைஞர்களே! மணப் பெண்களைக் காட்டிலும் சிறந்த அறிவும் உணர்ச்சியும் உங்களுக்கு இருக்குமாயின், அவற்றை அவர்களுக்கு ஊட்டுங்கள்; உண்மையான ஆசிரியர்களாகவும், வழிகாட்டிகளாகவும் இருந்து அவர்களுக்கு உதவுங்கள்; வழிகாட்டுங்கள்; தடைப்படுத்தாதீர்கள்; தப்பான வழிகளில் செலுத்தாதீர்கள். எண்ணம், சொல், செயல் ஆகிய அனைத்திலுமே உங்களிடையே பரிபூரண ஒற்றுமை நிலவட்டும். ரகசியம் என்ற பேச்சே வேண்டாம். ஈருடலும் ஓருயிருமாக விளங்குவீர்களாக!

போலிகளாய் இராதீர்கள். இயலாத காரியங்களைச் சாதிக்க வீணே முயன்று, உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். கட்டுப்பாடு, ஒருவனது உடல் நலத்தைக் கெடுக்கவே மாட்டாது. வெளிப்படையான கட்டுப்பாடுகளால் உடல் நலம் குன்றுகிறதேயன்றி, மன

அடக்கத்தினால் உடல் நலம் கெடுவதில்லை. உண்மையான தன்னடக்க முள்ளவனுக்குத் தினந்தோறும் பலம் அதிகரித்துக்கொண்டே போகும்; மன அமைதியும் வளர்ந்துகொண்டே வரும். மனத்தை அங்கும் இங்கும் அலையவிடாமல், எண்ணங்களைக் கட்டுப்படுத்துவது தான் தன்னடக்கத்திற்கு முதற்படியாய் இருப்பது. உங்களுக்கு இருக்கும் ஆற்றலின் அளவை அறிந்து கொள்ளுங்கள். எவ்வளவுக்கு உங்களால் இயலுமோ அவ்வளவுக்கு எதிலும் ஈடுபடுங்கள்.

லட்சியம் எது என்பதைச் சரியான முறையில் உங்களுக்குச் சொல்லிவிட்டேன். நேர்மையாகவே நடந்து கொள்ள, கூடுமானவரை முயலுங்கள். தவறிவிட்டால் அதற்காக வருத்தமோ, வெட்கமோ படவேண்டாம். பூணூல் அணிந்துகொள்வது எப்படி ஒரு புனிதமான சடங்கோ, அதை எப்படி ஒரு புதிய பிறப்பு என்று சொல்லுகிறோமோ அதைப் போலத் திருமணமும் ஒரு புனிதமான சடங்குதான்; புதிய பிறப்புத்தான்.

நான் கூறும் விஷயங்களைக் கேட்டுத் திகிலோ, சோர்வோ கொள்ள வேண்டாம். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றுக்குமிடையில் எப்போதுமே பரிபூரணமான தொடர்பு இருக்கட்டும். எப்போதுமே எண்ணத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். மற்றவை யாவும் தாமே சரிப்பட்டுவிடும். எண்ணத்தை விட வன்மை பொருந்தியது வேறெதுவுமில்லை.

செயல் சொல்லைப் பின்பற்றியும், சொல் எண்ணத்தைப் பின்பற்றியும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மகா பலம் பொருந்திய எண்ணத்தினாலேயே உலகம் இயங்குகிறது. எண்ணம் என்பது பரிசுத்தமாயும், பலம்

பொருந்தியதாகவும் இருக்குமானல், அதனல் ஏற்படும் பலன்களும் எப்போதுமே பரிசுத்தமானவையாயும், பலம் பொருந்தியவையாயும் இருக்கும். உன்னதமான இந்த லட்சியத்தையே ஆயுதமாகக் கொண்டு, நீங்கள் வெளிக் கிளம்புங்கள். எந்தவிதமான ஆசாபாசங்களாலும் உங் களுக்கு ஒருவிதத் தீங்கும் நேராது.

இங்கிலாந்து

காந்தியடிகள் ஏரவாடாச் சிறையிலிருந்த பொழுது, சபர்மதி ஆசிரமத்திலிருந்த ஒரு குழந்தை, இங்கிலாந்தைப் பற்றி விரிவாகக் கூறும்படி காந்தியடிகளுக்கு ஒரு கடிதம் எழு திற்று. காந்தியடிகளின் பதில் வருமாறு.—

லண்டன் மிகப் பெரிய நகரம். அங்கே ஏராளமான புகைப் போக்கிகள் உண்டு. அவை எல்லாவற்றையும் கறுப்பாக்கி விடுகின்றன. எதுவுமே வெள்ளையாக இராது. சூரியனைக் காண்பது அபூர்வம். ஆனல் ஆங்கிலேயர் நம்மைவிட அதிகக் கஷ்டப்பட்டு உழைப்பவர் கள். இங்கிலாந்தில் வீதிகள் மிகச் சுத்தமாக இருக்கும்.

கேள்வியும் பதிலும்

காந்தியடிகள்

கேள்வி: குழந்தைகளைத் திருத்தும்போது, கோபத்தையும் ஹிம்சையையும் முற்றிலும் எப்படித் தவிர்ப்பது?

பதில்: நெடுநாளாய் நம்மிடையே வழங்கும் பழமொழியை நீங்கள் அறிவீர்கள். "ஐந்து வயது வரையில் குழந்தையோடு விளையாடு; பத்து வய்தடையும்போது அடித்துப் புத்தி கற்பி; பதினறு வயதில் அவனை உனது நண்பனுக நடத்து". ஆனல் நீங்கள் இதைப்பற்றிக் கவலைப்படவேண் வேண்டாம். சில சமயம் நீங்கள் குழந்தைகளின் மீது கோபமடைய நேருகிறதென்ருல், அந்தக் கோபம் அஹிம்சையைச் சேர்ந்த கோபமே யாகும். நான் அறிவுள்ள தாய்மார்களைப் பற்றித்தான் பேசுகிறேன்; தாய்மைக்குத் தகுதியற்ற அறிவிலிகளைப் பற்றி நான் இங்குப் பேசவில்லை.

கேள்வி: நம்மை நாமே பூஜ்யமாக்கிக் கொள்ளவேண்டும் என்று செல்லுகிறீர்களே? அதன் பொருள் என்ன?

பதில்: நல்லவற்றைப் பெற்றுக்கொள்வதில் கடைசியில் நிற்றல், ஒவ்வொருவருக்கும் பணிபுரிதல், நன்றியை எதிர்பார்க்காதிருத்தல், துன்பமனுபவிக்க முன் நிற்றல் ஆகியவைதான். தன்னைத்தானே பூஜ்யமாக்கிக் கொள்பவர்கள் எப்பொழுதும் தாம் செய்யும் வேலையிலேயே முற்றிலும் ஈடுபட்டிருப்பார்கள்.

கேள்வி: கடவுள் என்பது மனிதனுடைய கற்பனை சக்தியின் சிருஷ்டியே யாகும். மனிதனைக் கடவுள் சிருஷ்டித்ததாகக் கூறுவதைவிடக் கடவுளை மனிதன் சிருஷ்டித்ததாகக் கூறுவதுதானே உண்மை?

பதில்: இந்த நண்பர் கூறுவது உண்மைபோலவே தோன்றும். இவர் தம்மை அறியாமலே 'கடவுள்' 'சிருஷ்டி' என்னும் வார்த்தைகளைக் கொண்டு நம்மை மயங்கவைக்கிறார். ஆனால் கடவுள்தான் விதியாகவும், விதியை ஏற்படுத்துபவராகவும் இருக்கிறார். ஆதலால் அவரைச் சிருஷ்டித்தவர் யார் என்ற கேள்விக்கு இடமேயில்லை. அதிலும் மனிதனைப் போன்ற அற்ப ஜந்துவையா கடவுளின் சிருஷ்டியுடன் சம்பந்தப் படுத்துவது ?

மனிதன் அணையைக் கட்ட முடியுமே யன்றி ஆற்றை உண்டாக்க முடியுமோ? அவன் நாற்காலியைச் செய்ய முடியுமே யன்றி மரத்தைச் சிருஷ்டிக்க முடியுமோ? நதியையும் மரத்தையும் சிருஷ்டிக்க முடியாத மனிதன், கடவுளைப் பலவிதமாகத் தன்னுடைய மனத்தில் எண்ணிப் பார்க்க முடியுமே யன்றி சிருஷ்டித்துவிட முடியுமோ?

கடவுள் மனிதனைச் சிருஷ்டித்தார் என்பதுதான் உண்மை. மனிதன் கடவுளைச் சிருஷ்டித்தான் என்பதெல்லாம் வெறும் பிரமையே யாகும். ஆயினும் கடவுள் கர்த்தாவுமில்லை, காரணமுமில்லை என்று வேண்டுமானால் யாரும் கூறிக்கொள்ளலாம். இந்த இரண்டில் எதைச் சொன்னாலும் அவருக்கு ஏற்கும்.

கேள்வி: சுதந்திர இந்தியாவில் குற்றவாளிக்கு எத்தகைய தண்டனை அஹிம்சா முறையில் அளிக்கப் பெறும்?

பதில்: அஹிம்சா பூர்வமான சுதந்திர இந்தியாவில் குற்றங்கள் நிகழலாமே யன்றி, குற்றவாளிகள் எனப்படுவோர் இருக்கமாட்டார்கள்; அவர்கள் தண்டிக்கப்படமாட்டார்கள். குற்றம் செய்வது என்பது ஒரு நோயே யன்றி வேறன்று. அத்துடன் அது தற்சமயம் அமலில் இருந்துவரும் சமூக அமைப்பின் விளைவாகவுமே இருக்கின்றது. ஆதலால், கொலை உள்பட, சகல குற்றங்களுக்கும் நோய்களுக்குப் போலவே சிகிச்சை செய்ய வேண்டும். அத்தகைய இந்தியா தோன்றுமோ தோன்ருதோ, அது வேறு விஷயம்.

கேள்வி: நீங்கள் மாமிசம் உண்ணவில்லை என்பதற்காக மட்டுமே, தாமும் மாமிசம் உண்பதை விட்டுவிடுகிறவர்கள், சரியான காரியத்தைச் செய்வதாகச் சொல்ல முடியாது எனறு கூறுகிறீர்கள். தங்களுடைய இந்த அபிப்பிராயம் தவருனதல்லவா?

பதில்: நான் கூறியதில் என்ன தவறு இருக்கிறது என்பது எனக்கு விளங்கவில்லை. ஒருவரைப் பார்த்து ஒன்றை விட்டுவிடுகிறவர், மற்ருெருவரைப் பார்த்து அதை மறுபடியும் கைக்கொண்டுவிடலாமல்லவா? நான் கூறியதன் சாரம் யாதெனில், எதையும் நன்ருக ஆராயாமலும், முழு மனத்துடனும் ஏற்றுக் கொள்ளாமலும் செய்யக்கூடாது என்பதே யாகும். ஆராயாமல் காப்பியடிப்பது அறிவில்லாமல் செய்யும் விளையாட்டே யன்றி வேறன்று. அது குழியில் தள்ளி பெரும் தீமையை உண்டாக்கும்.

கேள்வி: பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வரும் ஆயிரக் கணக்கான மக்கள், பிரார்த்தனைச் சமயத்தில் எந்த விஷயத்திலேனும் மனத்தை நிலை நாட்டுவது என்பது சாத்தியமான காரியமா?

பதில்: ஆம் என்றே பதில் கூறுவேன். பலர் கூடிப் பிரார்த்தனை செய்யமுடியும் என்ற நம்பிக்கையுடைய வனுயிருப்பதால்தான், இத்தகைய பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்திவருகிறேன். என்னுடைய அனுபவம், என்னுடைய நம்பிக்கைக்கு அரண் செய்கிறது. அத்தகைய பிரார்த்தனை பயனுடையதாக இருப்பது அதை நடத்துபவருடைய தூய்மையையும், அதில் கலந்துகொள்பவருடைய நம்பிக்கையையுமே பொறுத்திருக்கிறது. கலந்துகொள்பவருக்கு நம்பிக்கையிருந்தும் நடத்துபவர் ஆஷாடபூதியாக இருக்கக்கூடும். ஆனால், பொய்யாகிய இருளிலும் கூட மெய்யாகிய சூரியன் பிரகாசிக்கவே செய்யும். நான் நடத்தும் பிரார்த்தனைகள் பயனுடையவைதானு என்பது, என் மரணத்துக்குப் பிறகே தெரியக் கூடும்.

கேள்வி: விடுமுறைக் காலத்தில் மாணவர்கள் எதைதைச் செய்யலாம்? படிப்பதில் மனம் செல்லவில்லை; நூல் நூற்றுக்கொண்டேயிருந்தால் சலிப்பு ஏற்படுகிறது.

பதில்: நூல் நூற்பதில் இயற்கையாகவே ஒரு கவர்ச்சி இருக்கிறது; அதோடுகூட உயிரையே கொடுக்கும் தன்மையும் இருக்கிறது. நூல் நூற்பதினுல் சலிப்பு ஏற்படுகிறதென்ருல், இந்த இரு தன்மைகளையும் இவர்களால் உணர முடியவில்லை போலும். நூற்கும் ஒவ்வொரு கெஜ நூலும் தேசீயச் செல்வத்தை அதிகப்படுத்துகிறது என்பதை அறிவதில் கஷ்டமுண்டா? ஒரு கெஜ நூல் அதிகமில்லாததுபோலத் தோன்றலாம். உழைப்பை அதிகப்படுத்திக் கொண்டே போவதற்கு இதைவிட எளிதான தொழில் வேறு கிடையாது. எனவே நூல் நூற்பத

னுல் உள்ளீடான மதிப்பு அதிகமாகும். மாணவர்கள் ராட்டினத்தின் அமைப்பைத் தெரிந்துகொண்டு அதை நல்ல நிலேயில் வைத்துக்கொள்ள வேண் டும். அப்படி வைத்துக்கொள்ளப் பழகியவர்கள், நூற்பதில் ஒரு விதமான கவர்ச்சி இருப்பதைக் காண்பார்கள். ஆகவே வேறு எந்தத் தொழிலேயும் குறிப்பிட எனக்கு விருப்பமில்லே. நூற்பதைவிட அவசரத் தேவையான வேலேகளேயும் மாணவர்கள் பார்க்கலாம். அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களுக் குச் சென்று, அவற்றை நல்ல முறையில் சுகாதார மாய் வைத்துக்கொள்ள அவர்கள் உதவி புரியலாம்; நோய்வாய்ப்பட்டு இருப்பவர்களுக்கு சிகிச்சை செய்யலாம்; அல்லது ஹரிஜனக் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கலாம்.

கேள்வி: காங்கிரஸ் மகா சபையானது பொது ஸ்தாபனங் களுக்குப் பிரதிநிதிகளாகப் பெண்களே அதிகமாகத் தேர்தல் செய்ய விரும்பவில்லே என்று தோன்று கிறது. ஆனுல் அதிகமான பெண்களே அந்த ஸ்தாபனங்களில் சேர்த்துக்கொள்வது அவசியமும் நியாயமும் ஆகும். அது சம்பந்தமாகத் தங்கள் கருத்து யாது?

பதில்: அத்தகைய விஷயங்களில் சமத்துவமோ, பங் கீடோ செய்யும் விஷயத்தில் எனக்கு எவ்வித நோக்கமும் கிடையாது. திறமையைப் பொறுத்துத் தான் தேர்தல் செய்ய வேண்டும். இதுவரை நாம் பெண்களே இழிவாக எண்ணிவந்திருக்கிற காரணத் தால் நாம் இப்பொழுது திறமையான பெண்கள் கிடைக்குமிடங்களில் எல்லாம் ஆண்களுக்குப் பதி லாகப் பெண்களேத் தேர்தல் செய்ய வேண்டியதே

முறையாகும். ஆனால் பெண் என்பதைமட்டும் வைத்துக்கொண்டு உரிமை கொண்டாடுவது அபாய கரமானதாகும். பெண்கள் மட்டுமன்று, எந்த வகுப்பாரும் பிறருடைய தயவை எதிர்பார்த்து நிற்பது என்பது ஒரு நாளும் கூடாது. அவர்கள் நியாயத்தைக் கேட்க வேண்டுமே யன்றித் தாட்சண் யத்தைக் கேட்கக் கூடாது.

புத்தக ஞானம்

நான் கல்வி கற்ற காலத்தில் பாடப்புத்த கங்கள் அல்லாமல், வேறு புத்தகங்களே படித்த தில்லை என்று சொல்லிவிடலாம். உலக வாழ்க் கையில் பிரவேசித்த பின்னரே படிப்பதற்கு நேரமே கிடைப்பதில்லை. ஆதலின் புத்தக ஞானம் எனக்கு மிகக் குறைவு என்றே கூற வேண்டும். இதனால் எனக்கு அதிக நஷ்டம் நேர்ந்துவிடவில்லை என்பது என் நம்பிக்கை. படித்தது குறைவாய் இருந்தபடியால், படித்த தைக் கூடியவரை நன்றாக ஜீரணித்துக் கொள்ளுதல் சாத்தியமாயிற்று.

காந்தியடிகள் வாக்கு

எளிய வாழ்வு

பிறரிடமிருந்து பணம் உறியும் ஒரு தொழிலில் நான் தலைப்படுவதாக வைத்துக்கொள்வோம். அதனால் நான் பணக்காரனாகிறேன். அப் பொருள் கொண்டு இயற்கை நிதிக்கு மேம்பட்ட முறையில் குடும்பத்துக்கு உதவித் திருப்தியடைகிறேன். இவ்வாறு நடப்பேனாயின் நான் குடும்பத்துக்காவது, நாட்டுக்காவது சேவை செய்தவனாக மாட்டேன். என் வாழ்விற்க்கும், என்னைச் சார்ந்தவர் வாழ்விற்கும் வேண்டுவது பெற ஆண்டவன் எனக்குக் கை கால் தந்தான் என்னும் உள்ளம் கொள்வேனாயின், என் வாழ்வையும், மற்றவர் வாழ்வையும் எளிமையாக்கிக் கொள்வேன். இதனால் நான் பிறரை வருத்தாது, எனது குடும்பத்தைக் காப்பாற்றுவேன். ஒவ்வொருவரும் இவ் வெளிய முறையில் வாழ்ந்து வருவரேல், அவர் நாடு பொன்னாடாகும் !

கடமை

தந்தை அநியாயம் செய்வானானால், அவன் வீட்டை விடுத்து வெளியேக வேண்டுவது, அவன் பிள்ளைகள் கடன். தலைமை ஆசிரியர் தன் பள்ளிக்கூடத்தைக் கூடா ஒழுக்க நெறியில் நடத்துவானாயின், மாணாக்கர் அப்பள் ளியை விடுத்து அகல்வது சிறப்பு. நகரசபைத் தலைவனொருவன் லஞ்சக்காரனாய் இருந்தால், அங்கத்தவர் தூய்மை கருதி அச் சபையினின்றும் விலகல் நல்லது. அவ்வாறே ஓர் அரசாங்கம் சொல்லொணா அநியாயத்தில்

வீழுமாயின், குடிமக்கள் அதற்கு முற்றுமோ அல்லது ஒருபுடையோ, ஆள்வோர் தமது கொடுமையை உணர்ந்து திருந்தும்வரை, உதவி மறுத்தலை ஏற்பது அறம். யான் குறிப்பிட்ட முறைகளால், உடலளவிலோ உணர்வளவிலோ துன்பம் நிகழும். அத்துன்பமின்றி உரிமை பெறல் இயலாது.

பற்றுதல்

சபர்மதி ஆசிரமத்திலிருந்த மயில் இறந்துவிட்டதாக, ஆசிரமவாசியான சாரதா, எரவாடாச் சிறையிலிருந்த காந்தியடிகளுக்குக் கடிதம் எழுதினர். அக்கடிதத்தில், "மயில் உயிருடன் இருந்தபொழுது எவ்வளவு அழகாய் இருந்தது! இறந்ததும் எவ்வளவு அகோரமாய் இருந்தது" என்று குறிப்பிட்டிருந்தார்.

அதற்குக் காந்தியடிகள், "மயிலைப் போன்ற அதே நிலையில்தான் நாம் இருக்கிறோம். உயிருடன் உள்ள போது எவ்வளவு அழகான தோற்றமுடையவராக இருந்தாலும், அவர் இறந்ததும், அப்பிணத்தை நாம் பார்க்கக்கூட விரும்புவதில்லை; உடனே தகனம் செய்துவிடுகிறோம். ஆகையால், உடம்பின்மீது நமக்குப் பற்றுதல் கூடாது.

சக்தி

உங்கள் சக்திக்கு அப்பால் எந்தக் காரியத்தையும் நீங்கள் செய்ய முயலுதல் கூடாது. ஆனல் அதே சமயத்தில் உங்களால் இயன்றதைவிடக் குறைவாகச் செய்யவேண்டும் என்ற எண்ணத்துக்கும் இடம் கொடாதீர்கள். தங்கள் சக்திக்கு அதிகமான வேலைகளை மேற்கொள்வோர் அகம்பாவமுள்ளவர்கள்; பற்றுள்ளவர்கள்.

ஆனல் தங்கள் சக்திக்குக் குறைவாக வேலை செய்வோர் திருடர்கள்.

ஜனநாயகம்

உண்மையான ஜனநாயகத்தைப் பற்றி நம்முடைய கனவு நனவாக வேண்டுமானல் நாம் என்ன செய்ய வேண்டும்?

எளிய தாழ்ந்த இந்தியனையும், பெரிய மனிதனேடு ஒப்ப நினைத்து, அவனும் இந்த அரசை நடத்துவான் என்று எண்ண வேண்டும். தூய்மையுடன் அறிவும் இணைந்திருக்க வேண்டும். அப்போது யாரும், குலத்துக்குக் குலம், ஜாதிக்கு ஜாதி வேற்றுமை பாராட்டாமல் சமமாகப் பாவித்து, அன்புடன் யாவரையும் அரவணைத்துக் கொள்வார்கள்.

உழைக்கும் உழைப்பாளியையும், பணக்கார முதலாளியையும் சமமாகக் கருதுவோம். அறிவு வேலைக்கும் உடலுழைப்புக்கும் வேற்றுமை பாரோம். இந்த நிலை விரைவில் நிறைவேற நாமே விருப்பத்துடன் தோட்டிகள் ஆவோம்.

ஒவ்வொருவனும் சுதேசி விரதத்தை வாழ்க்கையில் கடைப்பிடித்து, மதுமாமிசம் ஒழித்து, தன் மனைவியில்லாத பிற பெண்ணைத் தாயாகவோ, தங்கையாகவோ, மகளாகவோ நினைப்பான். அவசியமானல் அவர்களுக்காகவே உயிரையும் நீப்பான்.

பெண்ணின் கற்பு

பெண்ணனவள் தியாகம், அஹிம்சை ஆகியவற்றின் உருவம் என்று நான் வர்ணித்திருக்கிறேன். அவள்

தன் கற்பையோ, கௌரவத்தையோ பாதுகாத்துக் கொள்வதற்கு ஆணை நம்பிக்கொண்டிருக்கக்கூடாது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு பெண்ணின் கற்பை ஓர் ஆடவன் காப்பாற்றினன் என்பதாக ஒரு செய்தியைக்கூட நான் கேட்டதில்லை. அவ்விதம் ஓர் ஆண் பாதுகாக்க முயலுவது முற்றிலும் நடக்காத காரியமே.

பலம்

வலிமை குறைந்தவர்கள் என்று பெண்களைக் கூறுவது வீண் அபவாதமாகும்; ஆடவர்கள் பெண்களுக்குச் செய்யும் அநீதியுமாகும். பலம் என்பது மிருக பலத்தையே குறிக்கும் என்றால் ஆணைக்காட்டிலும் பெண் மிருகத்தன்மையில் குறைந்தவள் என்பது உண்மைதான். அப்படியின்றி பலம் என்பது ஆன்ம பலத்தைக் குறிக்குமானல், ஆணைக் காட்டிலும் பெண் எவ்வளவோ உயர்ந்தவள் என்று சொல்லவேண்டும்.

இயற்கை வைத்தியம்

இயற்கை வைத்தியம் மூலம் எல்லா நோய்களையும் குணப்படுத்திவிட முடியும் என்று நான் சொல்லமாட்டேன். எந்த வைத்திய முறையும் அப்படிச் செய்துவிட முடியாது. முடியுமானல் நாம் இப்பொழுதே அமரர்கள் ஆகிவிடமாட்டோமா? ஆயினும் இயற்கை முறையானது குணப்படுத்த முடியாத நோயைப் பொறுமையுடனும் சாந்தியுடனும் சகித்துக் கொள்ளும் சக்தியை அளிக்கும். கோடிக்கணக்கான மக்கள் அனுபவிக்க முடியாததை நாம் அனுபவிக்கலாகாது என்று மட்டும் தீர்மானித்து விடுவோமானல், அப்புறம் செல்வர்களும் ஏழைகளும் கையாள வேண்டிய முறை இயற்கை முறையே தவிர வேறு கிடையது.

அணுகுண்டு

நான் அறிந்த மட்டில் அணுகுண்டானது ஊழூழி காலமாக மனித இனத்தை நிலைக்கும்படி செய்துவந்த உயர்ந்த உணர்ச்சிகளை உயிரற்றனவாகச் செய்துவருகிறது.

அணுகுண்டு செய்துள்ள அற்புதமான நாசவேலையிலிருந்து நாம் நியாயமாக அறிந்து கொள்ளக்கூடிய படிப்பினை யாதெனில், எப்படி ஹிம்சையை ஹிம்சையால் அழிக்க முடியாதோ அதுபோலவே அணுகுண்டை அணுகுண்டைக் கொண்டு அழிக்க முடியாது என்பதேயாகும்.

ஹிம்சையை அஹிம்சையைக்கொண்டே மாற்ற முடியும். துவேஷத்தைத் துவேஷத்தைக்கொண்டு வெல்ல முயன்றால், துவேஷம் அதிகமாகப் பரவவும் ஆழமாக வேரூன்றவுமே செய்யும். இது, மலை தோன்றிய காலம் முதல் இருந்துவரும் உண்மை.

எந்த மனிதனும் அஞ்சாமல், அடிபணியாமல் தனியாக நிற்பதற்கு உகந்த ஜீவநாடிபோன்ற உண்மை இதுதான்.

நம்பிக்கையில்லாதவர் உள்ள காலம் வரை, உண்மையைத் திரும்பத் திரும்பக் கூறவேண்டியது அவசியமே என்று பல ஆண்டுகளுக்குமுன் அறிஞர் மாக்ஸ் முல்லர் கூறியதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

உண்மையே அழகு

உண்மையிலும், உண்மையின் மூலமாகவும் நான் அழகைக் காண்கின்றேன். எல்லா உண்மைகளும்—உண்மையான கருத்துக்கள் மட்டுமல்ல, உண்மையான முகங்கள், உண்மையான சித்திரங்கள் அல்லது உண்மை

யான பாடல்கள் இவையும் மிக அழகாக உள்ளன. மக்கள் பொதுவாக, உண்மையில் அழகைக் காணத் தவறி விடுகிறுர்கள். சாதாரண மனிதன் உண்மையை விட்டுப் புறம்பே போய்விடுகிருன். பிறகு, உண்மையில் அழகு இருப்பதைக்காணும் சக்தியை இழந்த குருடஞகி விடுகிருன்.

பிழைகள்

பிழைகளை ஏற்றுக்கொண்டு திருத்திக் கொள்வதே உய்யும் வழி என்பதில் எனக்குப் பரிபூரணமான நம்பிக்கையுண்டு. அம்மாதிரிப் பிழைகளை ஏற்றுக்கொள்ளுதல் ஆன்மாவைத் தூய்மை செய்து ஆற்றல் அளிக்கும். அஹிம்சையைப் பின்பற்றுபவர் பழி வாங்காமல் பிறர் தரும் துன்பங்களை ஏற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அரசியல்

அரசியல் விஷயத்தை நான் பிரமாதமாகக் கருதவில்லை. அது சம்பந்தமாக எனக்கு எவ்விதக் குழப்பமும் உண்டாவதில்லை. பற்றற்ற தன்மை என்னும் கூரிய கோடாரியைக்கொண்டு, அரசியல் காட்டினூடே நான் எளிதில் வழி செய்துகொள்ள முடியும்.

கடவுளின் கைகள்

ராட்டினத்திலே கடவுளின் கைகள் இருந்து வேலை செய்வதாக எண்ணுகிறேன். நான் அப்படி எண்ணுவதற்குக் காரணமாய் இருப்பது, மனித சமுதாயத்தில் மிகவும் கீழான நிலையில் உள்ளவர்களுக்கு வேண்டியவற்றை அது தருகிறது என்பதேயாகும். அதனுல்தான் எந்த நேரத்திலே பேசவேண்டும், எந்த நேரத்திலே

பேசக் கூடாது என்பதைக் கவனியாமல், எப்போதுமே அதைப்பற்றிப் பேசுகிறேன், எண்ணுகிறேன், நூல் நூற்கிறேன், வணங்குகிறேன்.

சுத்தம்

சரீர சுத்தம் மனச்சுத்தத்திற்கான முதற்படியே யாகும். புறத்திலுள்ள அழுக்கைவிட அகத்திலுள்ள அழுக்கே அதிக அபாயகரமானது. நாம் நூற்றுக்கு நூறு சிந்தனையிலும் செய்கையிலும் சுத்தமாயிருக்க வேண்டும். அப்படிச் சுத்தமாயில்லாத மனிதன் மிருகத்தைவிடக் கேவலமானவன் ஆவான். ஏனெனில் மிருகம் ஓர் உபயோகமான பிராணி. அதனால் அது நம் அன்பிற்கும் மரியாதைக்கும் உரியதாகும். அசுத்தமான மனிதன் நல்ல சமூகத்தில் விரும்பத்தகாதவன் ஆவான்.

கைராட்டினம்

ஒவ்வொரு வீட்டிலும் அடுப்பு எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது கைராட்டினமாகும்.

பெண்

பெண் என்றால் தியாகத்தின் வடிவம் என்று கருதுகிறவன் நான். ஆயினும், ஆண்களுக்கு இல்லாத அபார சக்தி தங்களிடம் உண்டு என்பதைத் துரதிர்ஷ்டவசமாகப் பெண்கள் மறந்தே போனார்கள்.

தியாகம்

தியாகம் செய்வதனால் ஆனந்தம் பிறக்காவிட்டால், அந்தத் தியாகம் தியாகமன்று. தான் செய்யும் தியாகத்திற்காகத் தன்னிடம் எல்லோரும் அனுதாபம் காட்ட வேண்டுமென்று எதிர்பார்ப்பவன், மனித வர்க்கத்தில் ஓர் அற்பன்.

வாக்குறுதி

முன்பின் யோசியாமல் அவசரத்தில் வாக்குறுதி அளித்தல் கூடாது. ஒரு முறை வாக்குறுதி அளித்த பின், உயிர் போவதாய் இருந்தாலும் அதை நிறை வேற்றியே தீரவேண்டும்.

கோழைத்தனம்

ஒருவர், தாம் செய்யும் காரியங்களின் பலாபலன்களை ஏற்க மறுப்பது கோழைத்தனமாகும்.

கதர்

கதரில்லாத சுதேசியம் உயிரில்லாத உடல் போன்றது.

சாப்பாடு

தினம் எத்தனை தடவை சாப்பிடவேண்டும்? சிலர் தினம் இருமுறை சாப்பிடுகிறார்கள். ஆனால் பொதுவாக எல்லோரும் மூன்று தடவை சாப்பிடுவது வழக்கமாக இருக்கிறது; காலையில் வேலை செய்யப் போகுமுன் ஒரு முறை, மத்தியானம் ஒரு நேரம், பின்னர் மாலையில் அல்லது இரவில் ஒரு நேரம். மூன்று தடவைக்குமேல் சாப்பிடவேண்டிய அவசியமே இல்லை. நகரங்களில் சிலர் ஏதாவது சாப்பிட்டுக்கொண்டே யிருக்கிறார்கள். இதனால் கேடு அதிகம். ஜீரணக் கருவிகளுக்கும் ஓய்வு வேண்டும்.

பிறர் துன்பம்

மற்றவர்கள் படும் துன்பத்தை என்னால் சகிக்க முடியாது. நானும் மனிதன்தானே. துன்பம் துடைக்க வழி காணாதபோது, எனது மனித இயற்கை துடிதுடிக் கிறது. நெடுநாள் காணாத நண்பனைப்போன்று, காலனைக் காட்டித் தழுவ ஏங்குகிறேன்.

கடவுள் ஒருவரே

குர் ஆன், பைபிள், ஜெண்ட் அவஸ்தா, தொல்மத் அல்லது கீதை இவற்றில் எதன் மூலம் நோக்கினும், நமக்குக் கடவுள் ஒருவரே. அவர் உண்மை; அன்பு மயம். இதை என் வாழ்க்கையில் காட்டுவதைத் தவிர, உயிர் வாழ்தலில் வேறு பற்றுதல் எனக்குக் கிடையாது.

மதங்களின் ஆத்மா ஒன்று. ஆனால், அது பலவித உருவமைந்த உறைகளில் இடப்பட்டிருக்கிறது. ஊழி காலம் வரைக்கும் இந்த உருவப்பாடு இருந்துவரவே செய்யும். அறிவாளிகள், புறத்தோலைப் புறக்கணித்து விட்டு உள்ளே இலங்கும் அதே ஆத்மாவைக் காணுவர்.

மரணம்

எச்சமயத்திலும் மரணம் பாக்கியம். ஆனால், சத்தியம் என்னும் தன் லட்சியத்திற்காக வீரனாய் உயிர் துறப்பது இரட்டிப்புப் பாக்கியம்.

கட்டுப்பாடின்மை

கட்டுப்பாடின்மை பல முகங்களுடைய கொடிய மிருகம். முடிவில் அதற்குக் காரணமா யிருந்தவர்கள் உள்பட அனைவருக்கும் அது கேடிழைக்கும்.

காந்தி—படேல் சம்பாஷணை

1932-ஆம் ஆண்டில் காந்தியடிகளும், வல்லபாய் படேலும் எரவாடாச் சிறையில் இருந்தனர். காந்தியடிகள் தினந்தோறும் மணிக்கணக்காக நூற்று வந்தார். அதனால் அவருக்கு வலி உண்டாயிற்று. அதனைப் பொருட்படுத்தாமல் பிடிவாதத்துடன் நூற்று வந்தார். டாக்டர்கள் எவ்வளவோ சொல்லியும் காந்தியடிகள் கேட்கவில்லை.

படேல்: கைப் பெருவிரலில் ஆரம்பித்த வலி, முழங்கை வரை வந்துவிட்டது. இப்பொழுது அந்த வலி தோளுக்கு ஏறிவிடும். போதும் இந்த நூல் நூற்றல்.

காந்தியடிகள்: என்றுவது ஒரு நாள் ஒருவன் பிணம் தூக்குபவர்களின் தோள்மேல் ஏறித்தான் ஆக வேண்டும்.

படேல்: இல்லை; இல்லை. எங்களைத் திக்கற்ற நிலைமையில் விட்டுவிட்டுச் சென்றுவிடாதீர்கள். கப்பலைக் கரை சேர்த்துவிட்டுப் பின்னர் எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். அப்பொழுது நானும் உங்களுடன் வருகிறேன்.

குணமலை

பழைய முனிவர் இயல்புகளெல்லாஞ் செறியும் குண மலை நம் காந்தியடிகள். கொல்லாமை அடிகளின் நோன்பு; பொறுமை அவர் அணிகலன்; தியாகம் அவர் செல்வம்; பிறர்க்குழைத்தல் அவர் தொண்டு. தம் பெருமை தாமுணராதிருப்பது அவர் பெருமை. அவர் உடல் இயற்கையுடனும், அவர் உள்ளம் இறையுடனும் உறவாடிக்கொண்டிருக்கும். அவரது வெள்ளிய ஒற் றைக் கலையும், அழகிய சிறிய உடலும், என்றும் நீங்காப் புன்முறுவலும், அகன்ற ஆவின் செவியும், கண்ணோட்ட மும், எவ்வுயிரும் தம்முயிர் என்று கருதி யிரங்கும் நெஞ்ச மும், உள்ளத்தெழும் ஒளியும் (காண்போர்) மனத்துக்கு அமுதமாகும்.

சிறிய உடலில் எத்துணைப் பெரிய ஒளி! அவ்வுள் ளொளி—ஆன்ம சக்தி—பிறத்தற்கு நிலைக்களனாய் உள்ள காந்தியடிகளின் வாழ்க்கை, புது மனித வாழ்க் கைக்கு ஒரு பெரும் இலக்கியமாய் இலங்குகிறது.

—திரு. வி. க.

காந்தி வழி

அரசியல் விவகாரங்களில் மகாத்மா காந்தியின் அபிப்பிராயமே, நம் காலத்திய இதர அரசியல் வாதிக ளுடையதைவிட மிகவும் சிறந்தது. அவர் விருப்பப்படி நாம் நடக்க முயலுதல் வேண்டும். நமது காரியத்துக்

காகப் பலாத்காரத்தில் இறங்கக்கூடாது. ஆனால் தீங்கு என்று நினைக்கும் காரியத்தில் ஈடுபடாமல் இருப்பதே நல்லது. உலக சமாதானத்துக்குக் காந்தி வழியைத் தவிர வேறில்லை.

—ஐன்ஸ்டீன்

காந்தியடிகள் தாம் சொல்லும் பொருள்கள் பற்றி எந்தப் புத்தகத்தையும் ஆதாரம் காட்டுவதில்லை. தமக்குப் புலனான முடிவுகளை அவர் திடீரென்று சொல்லுவார். மிகவும் புரட்சிகரமான கருத்துக்களையும், திட்டங்களையும் அவர் வெளியிடுவார். அவருடைய கருத்து வெளிவந்தவுடனே, அவருக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் எல்லாருமே அது பிடிக்கவில்லை என்று கூறுவார்கள். அவரிடம் நம்பிக்கையுள்ளோர் மட்டுமே, அவர் இன்னும் கொஞ்சம் விளக்கிக் கூறட்டும் என்று பொறுமையாய்க் காத்திருப்பார்கள். இதற்கிடையில் அவர் கூறுகிற ரத்தினச் சுருக்கமான விளக்கவுரைகள் சிலருடைய மூளையிலேனும் படுகின்றன.

—ஆசார்யா கிருபளானி

காந்தி வழிதான் மிகச் சிறந்த வழி. ஆனால் உள்ளத்தில் தூய்மை இல்லாததால்தான் காந்தி வழியை நம்மால் பின்பற்ற முடியவில்லை. காந்தி வழியை அந்தரங்க சுத்தியுடன் பின்பற்றினால், உலகில் இன்று காணும் துயரமும், கஷ்டமும் இருக்காது. காந்தியடிகள் மறைந்து விடவில்லை. அவர் ஆத்மா என்றென்றும் நம்முடன் இருந்து, நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. பரிசுத்தமான உள்ளத்துடனும், உண்மையான பணிபுரியும் உணர்ச்சியுடனும், அவர் நமக்கு விட்டுச் சென்ற போதனைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

—வல்லபாய் படேல்

இமயம் போன்றவர்

1931-ஆம் ஆண்டில் வட்டமேஜை மகாநாட்டுக்குக் காந்தியடிகள் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபொழுது, பெர்னூர்டு ஷா அவரைப் பார்க்க வந்திருந்தார்.

காந்தியடிகளும் பெர்னூர்டு ஷாவும் அஹிம்சை முதல் சைவ உணவு வரை பல விஷயங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு, "காந்தியடிகளைக் கண்டதனுல் உங்கள் மனத்தில் எத்தகைய உணர்ச்சி ஏற்பட்டது?" என்று ஒருவர் பெர்னூர்டு ஷாவைக் கேட்டார்.

அதற்குப் பெர்னூர்டு ஷா, "இதைக் கேட்பதற்குப் பதிலாக, இமயமலையைக் கண்டதனுல் உங்கள் மனத்தில் தோன்றி உணர்ச்சி என்ன? என்று ஏன் கேட்கவில்லை" என்று பதிலளித்தாராம்.

காந்தியடிகள் மனித இனத்தில் இமய மலையைப் போன்றவர். இமயமலையின் பெருமையை மனிதனுல் உணர முடியுமே தவிர, வாயினுல் வெளியிட முடியாது.

இது ஒரு மகான், தம்முடைய காலத்தில் வாழ்ந்த வேருெரு மகானைக் குறித்துப் புகழ்ச்சியாகக் கூறிய அபிப்பிராயமாகும்.

ஆனுல், காந்தியடிகளிடம் இக் கேள்வியைக் கேட்டிருந்தால், அவர், "தம்பி, என்னைப் பெரிய மனிதன் என்று சொல்லாதே. நான் சிறிய சிறிய பொருள்களினுல் அமைந்தவன். ஏனெனில் இறைவனின் சிருஷ்டியிலுள்ள சிறிய ஜீவன்களுக்கும் சேவை செய்யவும், அவற்

றுடன் ஒருமை எய்தவும் வேண்டும்" என்று பதில் சொல்லியிருப்பார். இவ்வாறே பல முறை சொல்லியு மிருக்கிறார். இதில்தான் அவருடைய பெருமை அடங்கி யிருக்கிறது.

—பியாரிலால்

மௌனம்

சகோதரர் கைல்ஸும், பிரான்ஸ் மன்னர் செயிண்ட் லூயியும் சந்தித்தனர். ஒருவரை ஒருவர் தழுவி முத்த மிட்டனர். இருவரும் வாய்திறந்து பேசவே இல்லை; மண்டியிட்டனர். வாய்திறவாமல் மௌனமாகவே பிரிந் தனர். இது குறித்துச் சகோதரர் கைல்ஸ் "நாங்கள் இருவரும் வாய்திறந்து பேசுவதைப் பார்க்கினும், மௌனத்தால் அதிகம் பேசுதல் இயலும்" என்றருளி யுள்ளார். இதை நான் காந்தியடிகள் முன்னிலையில் அமர்ந்தபோது அனுபவித்தேன்.

—எம். ஜோன்ஸ்

காந்தியடிகள் லண்டனிலிருந்தபோது என் பள்ளி யைப் பார்வையிட வந்தார். பிள்ளைகள் அவரை வர வேற்றுச் சூழ்ந்தார்கள். அடிகள் என்ன செய்தார்? தரையில் அமர்ந்தார்; நூல் நூற்றார். அவரும் மௌனம்; எல்லோரும் மௌனம்; பேச்சே இல்லை.

—மாண்டிஸோரி

அரிய சாதனை

இங்கிலாந்தில் நடந்த வட்டமேஜை மகாநாட்டின் சமயத்தில், அதன் நடவடிக்கைகள் சில சமயம் இரவு பன்னிரண்டு மணிவரை நடக்கவே, அப்பொழுது இரவு இரண்டு மணிக்குத்தான் காந்தியடிகள் விடுதிக்

குத் திரும்புவார். ஆனால் வந்ததும், படுத்து இளைப்பாறுவதற்குப் பதிலாக, தரித்திர நாராயணனைப் பற்றிச் சிந்திப்பதற்காகவும், உலகத்திலுள்ள ஏழை மக்களுடன் தன்னையும் இணைத்துக் கொள்வதற்காகவும் ராட்டையில் நூல் நூற்பார். உணவருந்தும்பொழுது, ஒரிஸாவிலுள்ள எலும்பும் தோலுமான, ஏழை மக்களின் உடலைப் பற்றிய நினைவாகவே இருப்பார்.

ஒரு நாள் நான் ஆறணுக்கொடுத்து சிறிய தேன் பாட்டிலை வாங்கிவந்துவிடவே, அவருக்கு மிக வருத்தமாகிவிட்டது. "இவ்வளவு விலை கொடுத்துத் தேன் வாங்கிச் சாப்பிட எனக்கு என்ன உரிமை?" என்று கூறிக் கண்ணீர் பெருக்கினார். அவருடைய உணவைத் தயாரித்து வந்த மீராபென்னிடம், "ஜாக்கிரதை. என்னுடைய சாப்பாட்டுக்குத் தினமும் ஒன்றரை ஷில்லிங்குக்கு மேல் (ஒரு ரூபாய்) செலவழிக்கக்கூடாது" என்று கட்டளை இட்டிருந்தார். சாப்பிடுமுன், தட்டிலுள்ள ஒவ்வொரு பழம், கீரை ஆகியவற்றின் விலையையும் கேட்பார்.

ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருந்த சமயத்தில், ஒவ்வொரு நாளும் தன் தினக் குறிப்பில், இன்று இவ்வளவு 'காலரி' சாப்பிட்டேன் என்று குறித்து வருவது வழக்கம். உடலின் போஷணைக்கு எவ்வளவு 'காலரி' தேவையோ' அதற்கு ஒன்றுகூட அதிகமாகச் சாப்பிட்டு விடக்கூடாதென்பதில் வெகு ஜாக்கிரதையாக இருப்பார். ஏனெனில், உடலை கடவுளின் பணியைச் செய்ய உதவும் ஒரு கருவியாகவே செய்து வைத்திருந்தார்.

—பியாரிலால்

சிறுமியின் ஆசை

காந்தியடிகள் எரவாடாச் சிறையில் இருந்தபோது, சிறைச்சாலையிலிருந்த பூனைக்குட்டிகளிடம் மிகப் பிரியமாக இருந்தார். அதனைக் கேள்வியுற்ற ஒரு சிறுமி, காந்தியடிகளுக்கு "நீங்கள் பூனைகளிடம் மிகப் பிரியமாக இருப்பதாக அறிகிறேன். எனவே நானும் ஒரு பூனையாகப் பிறக்க விரும்புகிறேன்" என்று ஒரு கடிதம் எழுதினாள்.

காந்தியடிகள் அச் சிறுமிக்கு எழுதிய பதிலில், "குழந்தைகளிடம் பிரியமாய் இருப்பதுபோலவே பூனைக் குட்டிகளிடமும் நான் பிரியமாய் இருக்கிறேன். பூனை பகுத்தறிவில்லாத பிராணி. எனவே, பூனையாகப் பிறப்பது நல்லதன்று" என்று குறிப்பிட்டார்.

எது வாழ்வு ?

காந்தியடிகள்

ஸ்ரீ கே. நடராஜன் கீழ்க்கண்ட கடிதத்தை மூன்று மாதங்களுக்கு முன் அனுப்பினர் :—

" திருவிதாங்கூர் ஆலயப் பிரவேசப் பிரகடனத்தைப் பற்றி ஸ்ரீ மகாதேவ தேசாய் எழுதியுள்ள நூலில், தாங்கள் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பல விடங்களில் நிகழ்த்திய பிரசங்கங்கள் காணப்பெறுகின்றன. ஈசோபநிஷத்திலுள்ள முதல் சுலோகம் இருந்தால் போதும், மற்ற சாஸ்திரங்கள் எல்லாம் அழிந்து போனலும் பாதகமில்லை, இந்து மதம் அழிந்து போகாமல் நிலைநிற்கும் என்று தாங்கள் கூறியிருக்கின்றீர்கள்.

" கவிஞர் ரவீந்திரருடைய தந்தையார் தேவேந்திர நாத் தாகுருடைய வாழ்வில் ஜீவநாடி போன்ற மாறுதல் செய்தது அந்தச் சுலோகம்தான் என்பதை அறிவீர்கள் என்று நம்புகிறேன். தேவேந்திரருடைய தந்தையார் இறக்கும்பொழுது தம்முடைய குடும்பச் சொத்தை அதிகமாகக் கடனுக்கு உள்ளாக்கியிருந்தார். அதனல் தேவேந்திரர் அப்போது அதிகமாக மனம் சோர்ந்து போனர். அந்த நிலைமையிலிருந்தபொழுது ஒரு நாள், அவர் உட்கார்ந்துகொண்டிருந்த இடத்துக்கு ஒரு சிறு காகிதத் துண்டு பறந்துவந்தது. அதை எடுத்துப் பார்த்தார். அது சமஸ்கிருதத்தில் எழுதப்பெற்றிருந்தது. அவருக்கு அப்பொழுது சம்ஸ்கிருதம் தெரியாது.

தம்முடைய வீட்டுப் பண்டிதரிடம் காட்டினர். அதில் ஈசோபநிஷத்தின் முதல் சுலோகம் எழுதப்பெற்றிருந்தது.

"அதன் பொருளைக் கேட்டதும் என்னுடைய ஆன்மாவின்மீது அமிர்தம் வார்த்தது போலிருந்தது" என்று மகரிஷி தேவேந்திரர் தம்முடைய சுயசரிதையில் கூறியிருக்கிறார்.

"இறப்பதன் மூலம் இன்பம் துய்ப்பது என்னும் சொற்றொடர் நம்முடைய தினசரி அனுபவத்தையே கூறுவதாக என்னுடைய மனத்தில் பட்டது. எதில் அதிகமாக பற்று வைத்திருக்கிறேமோ, அதைத் துறந்துவிடுவதினும் பெரிய ஆனந்தம் வேறுண்டோ?"

இந்தக் கடிதம் பற்றி இதற்கு முன்னதாகவே எழுத எண்ணியும் இதுவரை முடியாமல் போய்விட்டது. ஆயினும், கடிதத்தில் கண்ட விஷயம் அமரத்துவமுடையதாகையால், அவசரப்பட்டு எழுதாததால் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. நான் அந்தச் சுலோகத்துக்கு இலக்கணத்துக்குப் பொருந்தாத முறையில் செய்துள்ள வியாக்கியானப்படியே நடந்துவர, என்னுலியன்ற முயற்சிகள் அனைத்தும் செய்து வருகிறேன். நான் அதிகமான புத்தகங்கள் படிக்கும் வழக்கமில்லாதவனாக இருப்பதால், மகரிஷி தேவேந்திரருடைய சுயசரிதையிலுருந்து ஸ்ரீ நடராஜன் எழுதியுள்ள விஷயம் எனக்கு இதுவரை தெரியாது.

மதம் என்று கூறினும், தூய்மையான இந்து மதம் என்று கூறினும், இரண்டும் எனக்கு ஒன்றேதான். மதம் அளிக்கக்கூடிய உதவியை எல்லாம், அந்த சுலோகமே அளிக்கும் என்ற என்னுடைய நம்பிக்கைக்கு அது

அரண் செய்கிறது. தினந்தோறும் காலையில் பிரார்த்தனை செய்யும் சமயத்தில் கீதையைப் பாராயணம் செய்கிறோம். அதிலுள்ள பதினெட்டு அத்தியாயங்களும் ஒரு வாரத்தில் பாராயணம் செய்யப் பெறுகின்றன. இந்த விதமாகப் பல வருஷங்களாக நடந்து வருகின்றது. கீதையானது ஈசோபநிஷத்தின் முதல் சுலோகத்தின் பாஷ்யமாக அமைந்திருக்கிறது.

ஸ்ரீ நடராஜனுக்குத் திடீரென்று பட்ட வியாக்கியானம் உண்மையில் ஒரு பாகத்தையே காட்டுவதாகத் தோன்றுகிறது. நான் கூறுவது தவறாக இருக்கலாம். ஆனால் நான் அறிந்த மட்டில் அவர் கூறும் வியாக்கியானம் அனுதினமும் சர்வ சாதாரணமாக அனுசரித்து வரும் தியாகமாகிய புராதனக் கொள்கையைத் தவிர வேறன்று. ஓர் உதாரணம் தருகின்றேன். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்காகச் சகல சுகங்களையும் தியாகம் செய்கிறார்கள். இந்த விஷயம் புதியதன்று. ஈசோபநிஷத்திலுள்ள சுலோகம் இந்த விஷயத்தைத் திரும்பக் கூறுவதற்காகச் சொல்லப்பட்டதன்று. அந்தச் சுலோகப்படி நடப்பது என்பது கிறிஸ்துவ வேதத்தில் புதிய ஏற்பாட்டில் கூறியுள்ளதும், இந்து சமயத்தில் 'பிரம்ம சமர்ப்பணம்' என்று கூறியுள்ளதுமான புனர்ஜன்மமே யாகும். ஆதலால் அந்தச் சுலோகத்துக்கு ஒரே ஒரு பொருள்தான் உண்டு என்பது என்னுடைய அபிப்பிராயம்.

நம்முடையது என்று எண்ணிக்கொள்ளும் ஒவ்வொன்றையும் கடவுளுடையதே என்று ஏற்றுக்கொண்டு வாழ்க்கைக்கு இன்றியமையாத அளவு மட்டுமே அவற்றை அனுபவித்தல் வேண்டும். அதாவது பகவத் கீதையில் கூறியுள்ளபடி, நாம் அணுவளவுகூடப் பற்

றில்லாமல் வாழவேண்டும். அந்த நிஷ்கர்மக் கொள்கையைத்தான் அந்த சுலோகம் உபதேசிக்கின்றது. அத்தகைய வாழ்வுதான் வாழ்வு.

ஈசோபநிஷத் முதல் சுலோகம்

ஓம். (தோன்றி மறையும்) இவ்வுலகில் தோன்றி மறைவதாயுள்ளது எது உண்டோ அது அனைத்தும் ஈசனால் வியாபிக்கப்பட்டதாக (காண) வேண்டும். (ஈசுவர பாவனையால் ஏற்பட்ட) அந்தத் தியாகத்தால் உன்னை ரட்சித்துக் கொள்—(உயிரை ரட்சிப்பதற்கு மட்டும் அவசியமான பொருளை ஈசுவரன் கொடுத்ததென ஏற்றுக்கொண்டு வாழ்வாயாக.) எவருடைய பொருளுக்கும் பேராசைப் படாதே.

—"உபநிஷத்ஸாரம்"

அன்பின் சக்தி

1922-ஆம் ஆண்டில் பாபு (காந்தியடிகள்) முதல் தடவை சிறை சென்ருர். அவரை எரவாடாச் சிறையில் வைத்திருந்தார்கள். இந்து, முஸ்லிம் ஆகிய இரு சமூகத்தினருக்கும் காந்தியடிகளிடம் மிகுந்த பக்தியுண்டு என்பது சிறைச்சாலை அதிகாரிக்குத் தெரியும். எனவே, காந்தியடிகள் ஏவிய வேலையைச் செய்வதற்கு, சிறைச் சாலை அதிகாரி, ஓர் ஆப்பிரிக்க சித்திக் கைதியை நியமித்தார். அக் கைதிக்கு இந்திய மொழிகள் எதுவும் தெரியாது. அவன், அநேகமாக எல்லாக் காரியங்களை யும் ஜாடைகளினுலும், தனக்குத் தெரிந்த பத்து இருபது வார்த்தைகளினுலும் செய்துவந்தான். இம்மாதிரியான மனிதனுக்குக் காந்தியடிகளிடம் பக்தி இராது; காந்தி யடிகளுக்கு அதிகச் சாதகமாக இருக்கமாட்டான் என்பது அதிகாரியான வெள்ளைக்காரரின் எண்ணமும், விருப்பமு மாகும். ஆனல் பாவம்! அந்த வெள்ளைக்காரத் துரைக்கு மனிதனுடைய உள்ளம், எல்லா இடங்களிலும் ஒரே வகையாய்த்தான் இருக்குமென்று தெரியாது.

ஒரு நாள் அந்தக் கைதிக்குத் தேள் கொட்டிவிட்டது. அவன் அழுது கூப்பாடுபோட்டுக்கொண்டு, பாபுவினிடம் வந்து கையில் தேள் கொட்டிவிட்டதென்று சொல்லிக் காட்டினன்.

எவருடைய துக்கத்தைக் கண்டாலும் பாபுவின் உள்ளம் உருகிவிடும். ஒரு கணமும் தாமதியாமல், பாபு அந்தக் கைதியின் கையில் தேள் கொட்டிய இடத்தை

நன்ருகக் கழுவித் துடைத்துவிட்டுக் கடித்த இடத்தைத் தம் வாயினுல் கௌவி உறிஞ்ச ஆரம்பித்தார். அவர் உறிஞ்சிய வேகத்தில் அவனுடைய வேதனையும் குறைந்துவிட்டது; அதற்குப் பிறகு பாபு, வேறு சிகிச்சைகள் செய்யவே அவனுக்கு முற்றிலும் குணமாகிவிட்டது.

அந்த ஏழையின் ஆயுள் முழுவதிலும் இவ்வளவு அன்பை எவரும் அவனுக்கு அளித்ததில்லே. அவன் அதுமுதல் பாபுவின் அடிமையாகி, அவர் ஏவியதையெல்லாம் செய்துவந்தான். அவருடைய எல்லாக் காரியங்களேயும் மிகுந்த பக்தி சிரத்தையோடு செய்யலாஞன். காந்தியடிகளுக்கு நூல் நூற்பது பிடிக்கும் என்பதை அவன் கண்டதும், ஒரு தக்ளியை எடுத்து வைத்துக்கொண்டு, பார்த்துப் பார்த்துத் தானே நூற்க ஆரம்பித்தான். பிற்காலத்தில் பஞ்சு வெட்டவும் கற்றுக்கொண்டு பாபுவுக்குப் பட்டை செய்து கொடுத்துவரலாஞன்.

தாம் எதிர்பார்த்ததற்கு மாருக எல்லாம் நடப்பதை சிறைச்சாலே அதிகாரி கவனித்தார். ஆஞல் அவரால் என்ன செய்ய முடியும்?

—காகா கலேல்கார்

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

கவுண்டர் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி.

கிளை ஆபீஸ் & ஷோரூம்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,

மானேஜிங் டைரக்டர்.



முன்னேற்றத்தில் அருஞ்செயல்

முற்போக்கான நாடுகளுக்குப் பல துறைகளில் நம் நாடு பின் தங்கியுள்ளது. துரித முன்னேற்றத்திற்கு உதவுவது நம் ஒவ்வொருவருடைய—தனிப்பட்டவர்கள், ஸ்தாபனங்கள்—பொறுப்பாகும். ஒன்றுபட்டு உழைப்போமாக.

T.V. சுந்தரம் ஐயங்கார் அன் சன்ஸ்
பிரைவேட் லிமிடெட் - மதுரை.

TVS

இதர T.V.S. ஸ்தாபனங்கள்: மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பி. லிட்., சதர்ன் ரோட்வேஸ் பி. லிட்., சுந்தரம் மோட்டார்ஸ் பி. லிட்., சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பி. லிட்., மதராஸ் மோட்டார் இன்ஸ்யூரன்ஸ கம்பெனி லிட்., சுந்தரம் பினான்ஸ் பி. லிட்., இந்தியா மோட்டார் பார்ட்ஸ அன் அசெஸரீஸ பி. லிட்., சுந்தரம்ஸ் பி. லிட்.,